மேழிச்செல்வம்

RA No 3/65
MADRAS RECORD OFFICE
15 JAN 1965
MADRAS



குரோதி௵ ஆவணி ௴

நெற்பயிருக்கு உரம் (கட்டுரை 5-ம் பக்கம் பார்க்க.)



2-ம் அட்டைப் படத்தில் காட்டியுள்ள "தூண்கள்" விவரம்.

R. R. No 3/65

½ # மேழிச் செல்வம்

வெளியிடுபவர் :

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளர்

சென்னை-5.

வருடாந்தர சந்தா	ரூ.	3.00
தனிப்பிரதி	ரூ.	0.25
ஆண்டு மலர்	ரூ.	0.50

உள்ளுரை

	பக்கம்
நெற்பயிருக்கு உரம்	5
விவசாயிகளுக்கு கடன் வசதிகளும் இதர சலுகைகளும்	8
கரும்பு நடவுக்கு விதைக்கரணைகளைத் தேர்ந்தெடுப்பதில் அதிக கவனம் செலுத்துங்கள்	11
செங்கரஸ் கிளாக்கஸ்	12
எள்ளுச் செடியின் "வைரஸ் நோய்கள்"	13
சம உயரக் கரைகளின் பராமரிப்பு ..	14
மாதிரிப் பழப்பண்ணை குற்றுலம் ..	16
வருமுன் காப்போம்	17
தென்னையில் நோய்கள்	18
வரகுப் பயிரில் சுடுமல்லி	20
சென்னை ராஜ்யத்தில் விவசாய வர்த்தகம் (இரண்டாம் பாகம்) ..	22
விவசாயச் செய்திக் கதிர்	24
வெற்றிப்பாதை	26
ஆகாசவாணி திருச்சிராப்பள்ளி ..	29
1964-ம் ஆண்டு ஜுன் மாதம் காலநிலை அறிக்கை	30

விளம்பரங்கள் :

பாக்டம்பாஸ்	4
பொட்டாஷ்	7
மெட்ரிக்	10
கஜலக்ஷ்மி	11
ராஜா பண்ணைத்தோட்டம் ..	16
சேலம் நர்சரி கார்டன்ஸ் ..	22
ராலீஸ் இந்தியா லிமிடெட் ..	23
வால்ட்டாஸ்	25
ஸ்ரீ முருகன்	27

பாக்டம்பாஸ்
(அமோனியம் பாஸ்பேட் 16:20)
அதிசய உரம்
FACT
பாக்டம்பாஸ் தாவர உணவு ஆகிய நைட்ரஜனும் பாஸ்பாரிக் அமிலமும் தகுந்த அளவில் கலந்துள்ள சீரான ஒரு கூட்டு உரம், நெல் பயிருக்கு ஏற்றது.
பாக்டம்பாஸ் நிலத்தில் ஆழமாகவும் துரிதமாகவும் ஊடுருவிச் சென்று இளம் பயிர்களை ஊக்குவிக்கும். அமோக வளர்ச்சியை உண்டு பண்ணும்.
உங்கள் தேவைக்கு பிராந்திய கிளை ஆபீஸுக்கு எழுதவும்.
FACT ... foremost name in fertilisers!
பெர்டிலைசர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: ஏலூர், உத்யோகமண்டல் P.O. கேரள ராஜ்யம்
பிராந்திய கிளை ஆபீஸ்:
30, பாரதி ரோடு, ராம்நகர், கோயமுத்தூர்-9.
CRITERION-FT-323

மேழிச்செல்வம்

சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனா
லுழந்தும் உழவே தலை.

மலர் 21	குரோதி ௵ ஆவணி ௴—1964—ஆகஸ்டு-செப்டெம்பர் [1889—1964]	இதழ் 8

நெற்பயிருக்கு உரம்*

டாக்டர். எ. மரியக்குழந்தை, எம். எஸ்ஸி., பிஎச். டி. (வாஷிங்டன்)
அருணா. இராசகோபால், பி. எஸ்ஸி. (வேளாண்மை)

மண்ணே மனித இனத்தின் அன்னையாகும். மண்ணைச் சார்ந்து வாழும் உயிர்களும், பயிர்களும் அவ்வன்னையின் பிள்ளைகள். நமது நாட்டின் மூல உணவுப் பயிர் நெல். இச் செந்நெல்லை இந் நாட்டின் நற்செல்வம் எனவும் சொல்லலாம். மண்ணில் வளரும் பயிர்கள் முறையான விளைவை அளிக்க மண்ணின் வளம் காக்கப்படுவதோடு, வளம் உயர்த்தப்படுதலும் வேண்டும். பயிர்களின் முக்கிய உணவுகளான தழைச்சத்து மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகிய உரங்களைக் கொண்டு தமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பயிர்களின் வாழ்வும், வளர்ச்சியும் வளநிலைக்குரிய பிற வாய்ப்புகளும் வெப்பதட்ப நிலைகளால் (Climate), மண்ணின் பண், பால், பிற காரணிகளால் (factors) மாறுபடுகின்றன. ஆதலால் பலதரப்பட்ட சூழ்நிலைகளில் உரச் சோதனைகளை மேற்கொள்வதன் மூலம், வேறுபடும் பல பகுதிகளின் பயிர் உணவுத் தேவைகளை அறிந்து அதற்கு எற்றவாறு உர அளவை நிர்ணயிக்க முடியும்.

சோதனை விளக்கம் :—நெற்பயிரின் உரத் தேவைகளை அறியும் பொருட்டு பல்வேறு உரங்களைப் பல ஊட்ட அளவில் நிலத்திற்கு அளிக்கப்பட்டது. தழைச்சத்து, மணிச்சதது, சாம்பல் சத்து ஆகியவறறைத் தனித்தனியாகவும்' மூன்றும் கலப்பாகவும் நிலத்திற்குப் போடப்பட்டன. அவைகள் :—

1.	தழைச்சத்து மட்டும்	எக்கர் ஒன்றுக்கு	20 ராத்தல் அளவு.
2.	,,	,,	30 ,,
3.	,,	,,	40 ,,
4.	,,	,,	60 ,,
5.	மணிச்சத்து மட்டும்	,,	20 ,,
6.	,,	,,	30 ,,
7.	,,	,,	60 ,,
8.	சாம்பல் சத்து மட்டும்	,,	20 ,,
9.	,,	,,	30 ,,
10.	,,	,,	60 ,,
11.	தழைச் சத்து மணிச்சத்து சாம்பல் சத்து மூன்றும் சேர்ந்து.	,,	ஒவ்வொன்றும் 20 ராத்தல் அளவு.
12.	,,	,,	ஒவ்வொன்றும் 30 ராத்தல் அளவு.
13.	,,	,,	ஒவ்வொன்றும் 60 ராத்தல் அளவு.

தமிழ் நாட்டில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, மதுரை, திருநெல்வேலி, சேலம் கோயம்புதூர் ஆகிய எட்டு மாவட்டங்களிலும் இந்த உரச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இச் சோதனைகள் 1959-ம் ஆண்டு முதல் 1962-ம் ஆண்டு வரை நடத்தப்பட்டன. இதன் முடிவுகள் பல்வேறு மாவட்டங்களில் வள நிலையையும், பயிரில் விளைவைக் கூட்ட வழி முறைகளையும் அளிப்பவைகளாக உள்ளன. (அருணாச்சலம் & மற்றோர் 1964).

* துடியலூர் உர விழாவிற்கு அளிக்கப்பட்ட கட்டுரை

1959 முதல் 1962 வரை நடத்தப்பட்ட உரச் சோதனையின் முடிவுகள் (1 ராத்தல் உரத்திற்கு தானிய விளைவு)

மாவட்டம்	தழைச்சத்து மட்டும்				மணிச்சத்து மட்டும்		
	20 ராத்தல்	30 ராத்தல்	40 ராத்தல்	60 ராத்தல்	20 ராத்தல்	30 ராத்தல்	60 ராத்தல்
தஞ்சாவூர்	11·2	6·4	11·9	5·6	11·1	9·6	7.6
திருச்சிராப்பள்ளி	12·1	6·3	9·3	7·1	10·2	10·7	6·7
தென்ஆற்காடு	19·6	11·7	16·2	9·8	19·4	11·7	10·6
செங்கற்பட்டு	10·0	9·3	..	8·1	8·3	4·5	6·9
மதுரை	18·4	10·6	..	14·4	12·9	6·8	3·9
திருநெல்வேலி	18·5	13·2	11·1	15·2	24·7	3·3	2·9
சேலம்	15·6	14·1	29·2	10·4	12·7	11·7	5·0
கோயம்புத்தூர்	22·7	11·1	24·2	3·1	10 3	5·5	3·4

மாவட்டம்	சாம்பல் சத்து மட்டும்			தழை சத்து + மணிச்சத்து + சாம்பல் சத்து ஆக மூன்று உரங்களும் சேர்ந்து		
	20 ராத்தல்	30 ராத்தல்	60 ராத்தல்	தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து ஒவ்வொன்றும் 20 ராத்தல்	தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து ஒவ்வொன்றும் 30 ராத்தல்	தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல்ச் சத்து ஒவ்வொன்றும் 60 ராத்தல்
தஞ்சாவூர்	8·1	8·2	4·9	23·5	19·8	9·6
திருச்சிராப்பள்ளி	8·0	10·2	3·9	20·5	15·0	10·2
தென்ஆற்காடு	19·4	2·7	1·5	40·7	25·9	16·2
செங்கற்பட்டு	7·6	10·6	8·0	35·1	8·0	9·2
மதுரை	9·2	4·8	2·1	29·1	18·0	12·0
திருநெல்வேலி	17·5	0·9	0·8	47·3	25·2	20·2
சேலம்	10·9	7·9	1·3	29·2	10.8	7·1
கோயம்புத்தூர்	5·1	13·4	7·6	27·2	19·7	8·3

உரங்களின் பலனை அறிய பல அளவுகளில் காணப்பட்ட விளைவை, இராத்தல் உரத்திற்குக் கிடைத்த தானியம் எவ்வளவு என கணக்கிடுதல் நலமாகும்.

தமிழ் நாடடின் எல்லா மாவட்டங்களிலும் 20 ராத்தல் தழைச்சத்து, 20 ராத்தல் மணிச்சத்து, 20 ராத்தல் சாம்பல் சத்து ஆகியவைகள் கலந்த ஊட்டத்திற்கு நல்ல பலன் கிட்டியுள்ளது. எனினும் 40 ராத்தல் தழைச்சத்திற்கு சேலம், கோயம்புத்தூர், தென்ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் நல்ல விளைவு காணப்படுகின்றது.

சிபாரிசுகள்.

இந்த உரச் சோதனையின் சிறப்பு பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்பட்டதாகும். இச் சோதனையின் மூலம் அறியும் படிப்பினை இதுகாறும் வேளாண்மைத் துறையால் சிபாரிசு செய்யப்பட்ட உரமிடும் முறைகள் நல்விளைவிற்குத் தேவையானவைகள் என்பது உறுதிபடுகின்றன. எனவே நெற்பயிருக்கு அளிக்க வேண்டிய உரங்கள் கீழ்வருவன ;—

தழை எரு	5,000	ராத்தல்
அமோனியம் சல்பேட்	150	,,
சூபர்பாஸ்பேட்	200	,,

இது பொதுவாக உபயோகிக்க வேண்டிய அளவாயினும் தென் ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களுக்கு அமோனியம் சல்பேட்டு சற்று கூடுதலாக அதாவது 200 ராத்தல்கள் வரை போடலாம். காரணம் இம் மாவட்டங்களில் மிகுதியான தழைச்சத்து உரத்திற்கு நல்ல விளைவு கிடைத்துள்ளது. அதோடு தென்ஆற்காடு, திருநெல்வேலி, சேலம் ஆகிய மாவட்டங்களில் சாம்பல் சத்தும் தேவைப்படுகிறது. எனவே இம்மூன்று மாவட்டங் களிலும் 30 முதல் 40 ராத்தல்கள் வரை மியூரியேரேட் ஆப் போட்டாஷ் அல்லது பொட்டாசியம் சல்பேட் அளிப்பது நலம். இப் பெரு உணவுகளோடு நெற்பயிருக்குத் தேவையான மாங்கனீசு சல்பேட் என்னும் நூண் உணவையும் 10 ராத்தல் அளிக்கவும்.

2–ம் அட்டைப் படத்தில் காட்டியுள்ள "தூண்கள்" விவரம்.

20 ராத்தல் தழைச்சத்து போட்டதில் 1 ராத்தலுக்குக் கிடைத்த அதிக தானிய விளைவு
20 ,, தானியச்சத்து ,, ,, ,,
20 ,, சாம்பல் சத்து ,, ,, ,,
20 ராத்தல் தழைச்சத்து ,, ,, ,,
20 ராத்தல் தானிய சத்து ,, ,, ,,
20 ராத்தல் சாம்பல் சத்து ,, ,, ,,

இவைகளைக் குறிக்கிறது.

உங்கள் நெற்பயிருக்கு

பொட்டாஷ்

K_2O

(நைட்ரஜன் பாஸ்பரிக் அமிலத்துடன்) உபயோகியுங்கள்

பொட்டாஷ் உங்கள் நெற் பயிரின் உரத்தையும், தரத்தையும் உயர்த்துகிறது

பொட்டாஷ் சிகப்பாகாமல் தடுக்கும்.

பொட்டாஷ் நோய் நொடிகளை எதிர்த்து நிற்க வலுவூட்டுகிறது.

பொட்டாஷ் பதரைக் குறைத்து, பயிர் விளைச்சலைப் பெரிதும் அதிகரிக்கிறது.

சகஜமான எருவுடன் ஏக்கராவுக்கு 25 கிலோ வரை பொட்டாஷ் ம்யூரியேட் உபயோகியுங்கள்.

பொட்டாஷ் மலிவானது - 25 கிலோ பொட்டாஷ் ம்யூரியேட் விலை 8 ரூபாய்க்கும் குறைவானது.

பொட்டாஷ் உபயோகியுங்கள், அதிக வருமானம் பெறுங்கள்.

உங்கள் உர வியாபாரியிடம் கேட்கவும். அல்லது இந்த முகவரிக்கு எழுதவும்:

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜென்ஸி லிமிடெட்

8/9, தம்பு செட்டித் தெரு. த. பெ. நெ. 14, சென்னை-1

IPG 2 TMa

விவசாயிகளுக்குக் கடன் வசதிகளும், இதர சலுகைகளும்

[ஏ. ஜே. நைட், பி.எஸ்ஸி. (ஏஜி.) டி.எச்.,எம்.எஸ். (கார்னல்), வானொலி விவசாய அலுவலர்,
விவசாய செய்தி நிலையம், சென்னை.]

விவசாயம் வளர்ந்தோங்கினாலே கிராம மக்களின் பொருளாதார நிலை உயரும். தமிழ்நாட்டு விவசாயப் பெருமக்களே! இதனை அறிந்தே நம் அரசாங்கம் விவசாய உற்பத்திக்காக உங்களுக்கென்று பல அரிய திட்டங்களைத் தீட்டியுள்ளது. விவசாய உற்பத்தியைப் பெருக்க நாம் நவீன விவசாய முறைகளை மேற்கொள்ளுவது மிகவும் அவசியம். இந்த வகையில் அரசாங்கம் நமக்குப் பல வழிகளிலும் உதவி செய்து வருகிறது. நிலங்களைச் சீர்திருத்தவும், கிணறுகள் அமைக்கவும், உழவடைச் செலவிற்கும், இன்னும் அனேக வகைகளில் அரசாங்கம் கடன் வசதி அளித்து வருகிறது. அரசாங்கம் உங்களுக்கென அளிக்கும் கடன் மற்றும் சலுகைகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு அரசாங்கத்தின் மூலமாக கிடைக்கக்கூடிய கடன் வசதிகளில் பல, தங்கள் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலிருந்து பெறக்கூடியவையாகும். சில கடன் வசதிகளை தங்கள் மாவட்ட விவசாய அலுவலரிடமிருந்து பெறலாம். வேறு சிலவற்றை உதவி விவசாய பொறியாளர் மூலமாகப் பெறலாம்.

இப்பொழுது, உதவி விவசாய பொறியாளர் மூலம் பெறக்கூடிய கடன் வசதிகளைக் கவனிப்போம்.

அதிகமான நிலத்தை குறுகிய நேரத்தில் ஆழமாக உழக்கூடிய டிராக்டர்களும், அதன் உபகரணங்களும் தவணை முறையில் வழங்கப்படுகின்றன. டிராக்டர்களும் அதன் உபகரணங்களும் வாங்குவதற்கு ரூ. 20,000 வரை கடன் வசதி அளிக்கப்படுகிறது. இந்த ரூ. 20,000 ஏழு வருட சமதவணைகளில் வசூலிக்கப்படும். இக்கடன் வசதி பெற விரும்பும் விவசாயிகளுக்கு ரூ. 30,000 மேல் மதிப்புள்ள வில்லங்கமற்ற நிலச்சொத்து மதிப்பு இருக்கவேண்டும்.

டிராக்டர்களை வாங்குவதற்கான கடன் வசதி பெற உங்கள் உதவி விவசாய பொறியாளர் மூலமாக தமிழ் நாடு விவசாயத் துறை நெறியாளருக்கு விண்ணப்பித்துக் கொள்ளுங்கள்.

நீர்ப்பாசன வசதிக்கென வடிமுனைக் குழாய்க் கிணறுகள் (Filter point tube wells) இறக்கி அதற்கான என்ஜின் அல்லது மோட்டார், பம்பு செட்டுகள் வாங்க ரூ. 3,000 வரை கடன் வசதியளிக்கப்படுகிறது. இக்கடன் ஐந்து வருடத் தவணைகளில் வசூலிக்கப்படும். இதையும் உங்கள் உதவி விவசாய பொறியாளருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளுங்கள்.

குழாய்க் கிணறுகள் (Bore wells).—இவைகளை அமைக்க அதிகபட்சம் ரூ. 6,000 வரை கடன் வழங்கப்படுகிறது. இதற்காகும் செலவில் 10 சதவீதம் வரை, ரூ. 500-க்கு மேற்படாமல் சலுகைத் தொகையாக வழங்கப்படும். இத்தொகை ஐந்து சம வருட தவணைகளில் வசூலிக்கப்படும். இந்தக் கடனையும் உதவி விவசாய பொறியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மண் அரிப்பைத் தடுத்து மண் வளத்தைப் பாதுகாக்க சரிவான நிலங்களில் வரப்புகளையும், மலைச் சரிவுகளில் படிவு மட்டங்கள் (Terraces) போன்றவைகளையும் விவசாயத்துறையே அமைத்துக் கொடுக்கிறது. வரப்புகளை அமைக்க 25 சதவீத மான்யமும், படிவுமட்டங்களாயிருப்பின் 50 சதவீத மான்யமும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. மீதி செலவு தொகையை 20 வருட சம தவணைகளில் வசூலிக்கப்படும். மண்வளப்பாதுகாப்பு வேலைகளை அந்தந்த பிராந்திய மண்வளப் பாதுகாப்பு உதவி விவசாயப் பொறியாளர் மேற்கொள்ளுவார்.

அடுத்தப்படியாக, உங்கள் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் மூலம் பெறக்கூடிய கடன் வசதிகளைக் கவனிப்போம்.

நெல், சிறு தானியம் பயிரிடும் விவசாயிகளுக்கு.—நெல், சிறுதானியப் பயிர்களுக்கு உரமிட வழங்கப்படும் கடன் வசதியாவது, அமோனியம் சல்பேட் போன்ற தழைச் சத்து இரசாயன உரங்கள் வாங்க ஒரு ஏக்கருக்கு ரூ. 35 வீதம் அதிக பட்சம் ரூ. 500 வரை ஒரு நபருக்கு கொடுக்கப்படுகிறது. சூப்பர் பாஸ்பேட் போன்ற தானியச் சத்து உரங்கள் வாங்க ஒரு ஏக்கருக்கு ரூ. 15 வீதம் அதிக பட்சம் ரூ. 250 வரை கொடுக்கப்படுகிறது. கலப்பு உறங்கள் நெ. 1-ம், நெ. 2-ம் வாங்க ஏக்கருக்கு ரூ. 50 வீதம் அதிக பட்சம் ரூ. 500 வரையில் கடன் வாங்கலாம்.

மேலே சொன்ன இரசாயன உரக் கடன்கள் ஒரு வருடத்திலேயே வசூலிக்கப்படும்.

பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு.—பருத்திக்கு உரமிட, தீவிர உரமிடும் திட்டத்தின்கீழ் ஒரு ஏக்கருக்கு ரூ. 50 வீதம் அதிக பட்சம் ரூ. 500 வரை இறைவைப் பருத்திக்கும், மானவாரி பருத்திக்கு உரமிட ஏக்கருக்கு ரூ. 30 வீதம் அதிகபட்சம் ரூ. 300 வரை குறுகிய கால கடன் வழங்கப்படுகிறது.

கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு.—கரும்புக்கு உரமிட தீவிர உரமிடும் திட்டத்தின்கீழ் ஏக்கருக்கு ரூ. 100 வீதம் அதிக பட்சம் ரூ. 750 வரை குறுகிய காலக் கடன் வழங்கப்படுகிறது. இக்கடன் தொகை ஒரு வருடத்தில் வசூலிக்கப்படும்.

நிலக்கடலை, எள்ளு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு.—முழு பண உதவி திட்டம் செயல்படாத இடங்களில் நிலக்கடலைக்கும் எள்ளுக்கும் மானவாரி பயிராயிருப்பின் ஒரு ஏக்கருக்கு ரூ. 25-ம் இறைவைப் பயிராயிருப்பின் ரூ. 50, அதிக பட்சம் ரூ. 500 வரை குறுகிய காலக் கடனை வழங்கப்படுகிறது.

இதில் ஒரு குறிப்பைக் கவனிக்கவும். முழுபண உதவி திட்டம் செயல்படுமிடங்களில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக இக்கடன் அளிக்கப்படுகிறது.

தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு.—தென்னை சாகுபடியில் இரசாயன உரமிட ஒரு ஏக்கருக்கு ரூ. 100 வீதம் ரூ. 500 வரை குறுகிய காலக் கடனாக விநியோகிக்கப்படுகிறது.

அடுத்தபடியாக, மாவட்ட விவசாய அலுவலகரிடமிருந்து விவசாயிகள் பெறக்கூடிய கடன் வசதிகளைப் பற்றிப் பார்ப்போம்.

பழச் சாகுபடி செய்யும் விவசாயிகளே !

நீங்கள் புதிய தோட்டங்கள் அமைக்க ரூ. 300 வீதம் அதிகபட்சம் ரூ. 2,000 வரை நீண்ட காலக் கடனைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கு கடன் வாங்கும் பணத் தொகையின் 1½ மடங்கு தொகைக்கு மதிப்புள்ள வில்லங்கமற்ற நிலச்சொத்து மதிப்பு இருக்கவேண்டும். இக்கடன் ஆறும் வருட ஆரம்பத்திலிருந்து 10 வருடங்களில், அதாவது 16-வது வருடம் ஆரம்பம் வரை வசூலிக்கப்படும்.

திராட்சைத் தோட்டம் அமைக்க விரும்பும் விவசாயிகளுக்கு.—திராட்சைத் தோட்டம் அமைப்பதற்கு, இதர பழச்செடிகளை நட்டு பராமரிப்பதைவிட அதிக செலவாகும். ஆதலால் திராட்சைத் தோட்டம் அமைக்க ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 600 வீதம் அதிக பட்சம் ரூ. 2,000 வரை நீண்டகாலக் கடன் கொடுக்கப்படுகிறது.

இக்கடன் தொகை 6-ம் வருடத்திலிருந்து 5 வருட தவணைகளில் வசூலிக்கப்படும்.

மேற்கூறிய அத்தனைக் கடன் தொகைகளும் வருடத்திற்கு 5½ சத வட்டியுடன் வசூலிக்கப்படும்.

குறுகிய காலக் கடன்கள் அத்தனையும் ஒரு வருடத்திலேயே வசூலிக்கப்படுகின்றன. இவை தவிர ஒரு சில விசேஷ திட்டங்களின் மூலம் ஆங்காங்கே விசேஷத்த கடன் வசதி அளிக்கப்படுகிறது. அவைகளில் இரண்டு முக்கியமான விசேஷ கடன் வசதிகளைப்பற்றி இங்கு குறிப்பிடுகின்றேன்.

ஒன்று, நிலக்கடலை தீவிர சாகுபடி திட்டப் பகுதிகளாகிய கோவை, ஈரோடு, விழுப்புரம், கடலூர், போளூர், கரூர், திருச்சி, பட்டுக்கோட்டை, தஞ்சை, சைதாப்பேட்டை செங்கற்பட்டு, சேலம் ஆகிய விவசாய பிரிவுகளில் அமுலில் உள்ள ஒரு திட்டமாகும். இந்த திட்டத்தின்படி சிவப்புக் கம்பளிப் பூச்சியை ஒழிப்பதற்கு அந்தந்த இடத்திலேயே '' உடனடிக் கடன் '' (Spot loan) வழங்கப்படும். இந்தக் கடன் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வழங்கப்படுகிறது.

இந்த திட்டத்தின்படி, நிலக்கடலை சாகுபடி செய்துள்ள ஒவ்வொரு விவசாயிக்கும், உடனுக்குடன் அந்தந்த கிராமத்திலேயே, ஒரு பிரத்தியேக கடன் விண்ணப்ப பாரத்தில் கையொப்பம் வாங்கிக்கொண்டு பி. எச். சி. 10 சதவீதம், அல்லது பாலிடால், அல்லது எண்டிரின் போன்ற பூச்சி மருந்துகள் கடனாக வழங்கப்படுகின்றன. இந்த கடன் வசதி நிலச் சொந்தக்காரர்களுக்கும், எந்தவித தாமதமுமின்றி கடன் மனுவில் கையொப்பமிட்ட ஒரு சில நிமிட நேரத்திலேயே வழங்கப்படுகிறது. கடன் விண்ணப்பங்களில் கிராமக் கர்ணம், பஞ்சாயத்துத் தலைவர்களின் கையொப்பம் பெறுவதில் விவசாயிகளுக்கு எந்த விதமான சிரமமும் இல்லாதபடி அவர்கள் முன்னிலையிலேயே கடன் வழங்கப்படுகிறது. இதனால் காலாகாலத்தில் பூச்சி மருந்து கொடுக்க முடிகிறது. இத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பணம் நிலவரியோடு வசூல் செய்யப்படுகிறது.

இரண்டாவது விசேஷக் கடன் வசதி காய்கறி அபிவிருத்திக்காக சில நகரங்களிலும், அதன் சுற்றுப்புறங்களில் வழங்கப்படுகிறது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி நகரங்களிலும் அதை சுற்றி 30 மைல் சுற்று வட்டாரத்தில் இருக்கும் காய்கறித் தோட்டக்காரர்களுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 120 காய்கறிச் சாகுபடிக்கென கடன் கொடுத்து உதவப்படுகிறது. இக்கடன் பஞ்சாயத்து யூனியன் அலுவலகரிடமிருந்து கிடைக்கப் பெறலாம்.

இத்தகைய கடன் வசதிகளைக் காலா காலத்தில் பெற்று முழுப் பலனைப்பெற விவசாயப் பெருமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இப்பொழுது அரசாங்கம் வழங்கும் இதர சலுகைகளைப் குறித்துப் பார்ப்போம்.

நவீன சாகுப்படிக் கருவிக்காக வழங்கும் சலுகைகள்.—மேலூர் கலப்பைகள் 25 சதவீதம் குறைந்த விலையிலும், இறக்கைக் கலப்பைகள் மூன்றில் ஒரு பங்கு குறைந்த விலையிலும், இதர திருந்திய விவசாயக் கருவிகள் பாதி விலையிலும் விவசாய விஸ்தரிப்பு அலுவலகங்களிலிருந்து பெறலாம்.

உயர்தர விதைக்காக வழங்கும் சலுகைகள்

1. நெல், சிறு தானிய விதை உற்பத்தி செய்து தரும் ''கிராம சகாயக்''களுக்கு 100 கிலோ விதைக்கு ரூ. 5 வீதம் மான்யத் தொகையாக, பஞ்சாயத்து யூனியன் மூலம் வழங்கப்படுகிறது.

2. பசுந்தாள் உரப்பயிர் விதைகள் 15 சதவீதம் குறைந்த விலையில் விவசாய கிடங்குகளில் வழங்கப்படுகின்றன.

3. பசுந்தாள் உரப்பயிர் விதை தயாரித்துக் கொடுக்கும் விவசாயிகளுக்கு 100 கிலோ விதைக்கு ரூ. 5 வீதம் மான்யத் தொகையாக பஞ்சாயத்து யூனியன் மூலம் வழங்கப்படுகிறது.

4. காய்கறி விதைகள், பழச் செடிகள் விவசாய டிப்போக்களில் பாதி விலையில் வழங்கப்படுகின்றன.

5. உள்ளூர் எரு அபிவிருத்திக்காக விவசாயிகள் வெட்டும் கம்போஸ்ட் குழி ஒன்றுக்கு ரூ. 6 வீதம் பஞ்சாயத்து யூனியன் மூலம் வழங்கப்படுகிறது.

பயிர்களில் பூச்சி, பூஞ்சண நோய்களின் தடுப்பிற்காக அரசாங்கம் அளிக்கும் சலுகைகள்

1. உணவுப் பயிர்களுக்கு 25 சதமானிய விலையில் பூச்சி, பூஞ்சண மருந்துகள் வழங்கப்படுகிறது.

2. எண்ணெய் வித்துப் பயிர்களுக்கு கோயம்புத்தூர், சேலம், தென் ஆற்காடு, மதுரை மாவட்டங்களில் 50 சத மான்ய விலையில் பூச்சி மருந்து வழங்கப் படுகிறது.

3. காய்கறிகளுக்கும் பருத்திக்கும் 50 சத மான்ய விலையில் பூச்சி, பூஞ்சண மருநதுகள் வழங்கப்படுகிறது.

4. பாக்கு மரங்களில் பூச்சி, பூஞ்சண நோய்கள் தடுப்பிற்காக கோயம்புத்தூர், சேலம், கன்னியாகுமரி மாவட்டங்களில் பூச்சி, பூஞ்சண மருந்துகளை முக்கால் விலையில் வழங்கப்படுகிறது.

5. கரும்புப் பயிருக்கு 50 சத விலையில் பூச்சி, பூஞ்சண மருந்துகள் வழங்கப்படுகிறது.

6. தென்னை மரத்தைத் தாக்கும் பூச்சி, பூஞ்சண நோய்களைத் தடுக்க 50 சத மான்ய விலையில் பூச்சி பூஞ்சண மருந்துகள் வழங்கப்படுகிறது.

7. நீலகிரி மாவட்டத்தில் மட்டும், உருளைக்கிழங்குப் பயிரைத் தாக்கும் பூஞ்சண நோயைத் தடுக்க 50 சத விலையில் மருந்து வழங்கப்படுகிறது.

8. தென்னை, கமுகுத் தோட்டக்காரர்களுக்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை, கையால் இயக்கும் மருந்து தெளிப்பான்கள் 50 சத மான்ய விலையில் வழங்கப் படுகின்றன. மான்யத் தொகை ரூ. 100-க்கு மேற் படாது வழங்கப்படுகிறது.

இத்தகைய கடன் வசதிகளையும் சலுகைகளையும் காலா காலத்தில் பெற்று முழுப்பலனையும் அனுபவிக்குமாறு விவசாயப் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கடன் வசதிகளை காலதாமதமின்றி பெற விவசாயிகள் முன்னதாகவே சம்பந்தப்பட்ட அலுவலருக்கு விண்ணப் பிக்க கேட்டுக்கொள்ளுகிறேன். கேளுங்கள் கொடுக்கப் படும். வாங்கிய கடன் தொகையை விவசாயிகள் சீரிய முறையில் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்குவீர்.

(29—5—64 அன்று கிராம வானொலி மன்ற நிகழ்ச்சியில் ஒலி பரப் பப்பட்டது.)

ஒருபோழுதும் ஒத்துப்பார்க்காதீர்கள்...

உங்கள் குழந்தைகளை அக்கம் பக்கத்துக் குழந்தைகளுடன் ஒத்துப பார்த்தால் ஏமாற றந்தான ஏற்படும் அதே மாதிரி மெட்ரிக் முறையையும், பழைய சேர், வீசை முறை யையும் ஒத்துப் பார்ப்பது வீண் வேலைதான. இதனால் உங்கள் நேரத்தை வீணடிபபதுடன, நஷ்டமும் அடைவீர்கள்.

துரிதமான சேவைக்கும், நேர்மையான வாத்தகததிற்கும் பொருள்களை

மெட்ரிக் யூனிட்டுகளில் வாங்குங்கள்

கரும்பு நடவுக்கு விதைக் கரணைகளை தேர்ந்தெடுப்பதில் அதிக கவனம் செலுத்துங்கள்

[க. நாராயணன் B.Sc., (Ag.), மத்திய கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர்].

பயிர்த் தொழிலில் அதிக விளைச்சலுக்கு முக்கிய காரணங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட நல்லரக விதைகளை பயன்படுத்துவது ஒன்றாகும்.

சாதாரணமாக கரும்பு சாகுபடிக்கு விளைந்த கரும்பையே கரணைகளாக வெட்டி விதைகளாக நடவு செய்கிறோம். நடவுக்கான கரும்பை நாம் சரியாக தேர்ந்தெடுக்காத காரணத்தால் நடவுப் பயிரில் முளைப்பு பாதிக்கப்பட்டு, நோய், பூச்சிகள் இவைகளால் தாக்கப்பட்டு பின்பு விளைச்சலும் சர்க்கரைச் சத்தும் குறைந்து விடுகின்றன.

நல்ல செழிப்பான பயிரை விளைவித்து அதிக மகசூல் பெற கீழ் குறிப்பிட்ட சில முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

1. நன்றாகப் பராமரித்து, உரமிட்டு, செழித்து வளர்ந்த குறுகிய காலப் பயிரை (6–8 மாதம்) விதைக்காக தேர்ந்தெடுக்க வேண்டும்.

2. கட்டை பயிர், பூத்த கரும்பு இவைகளை தவிர்க்க வேண்டும்.

3. கலப்படமில்லாத ஒரே ரகக் கரும்பாய் இருக்க வேண்டும்.

4. முதிர்ச்சியடைந்த கரும்பானால் மூன்றில் ஒரு பாகம் மேற்பாகத்தை (கொழுந்தாடை) கரணைக்காக பயன்படுத்தலாம். மெல்லிய லேசான கரும்புகளை நீக்கி விடவேண்டும்.

5. குருத்துப்பூச்சி, சொறிப்பூச்சி இவைகளாலும் வாடல் நோய், காப்பூட்டை, அன்னாசிப்பழ நோய் முதலியவற்றாலும் தாக்கப்படாத கரும்பையே பயன்படுத்த வேண்டும்.

6. கரணைகள் நன்கு செழித்த, உறுதியான பருக்கள் கொண்டதாய் இருக்க வேண்டும். காய்ந்ததும், சேதமாகிய பருக்களையுடைய கரணைகளையும், வேர்கள் கொண்டதும், முளைவிட்ட கரணைகளையும் நீக்கிவிடவேண்டும்.

7. தோட்டக்கால் பூமிகளுக்கு எக்கர் ஒன்றுக்கு 15,000 முக்கண் கரணைகளும், நஞ்சை நிலங்களுக்கு 22,500 இரு பருக்கள் கொண்ட கரணைகளும் போதுமானது.

8. கரணைகளை வெட்டியவுடன் நட்டுவிடவேண்டும். நடுவதற்கு காலதாமதமானால் வெட்டிய கரணைகளை குவியலாக நிழலில் போட்டு, கரும்பு சோகைகளால் மூடி தினமும் தண்ணீர் தெளித்து வரவேண்டும். இவ்வாறு 3 லிருந்து 5 நாட்கள் வரை கரணைகளை பாதுகாத்து வைக்கலாம்.

9. தூர இடத்திலிருந்து விதைக்கரணைகளாகக் கொண்டு வராமல் சோகையுடன் கூடிய கரும்பை அப்படியே கொண்டுவருவது நல்லது. பருக்கள் சேதமாவதை இதன் மூலம் ஓரளவு தடுக்கலாம்.

10. நடவுக்கு முன் கரணைகளை அரிடான் 5 அவுன்சு (140 கிராம்) அல்லது அகலால் 10 அவுன்சு (200 கிராம்) மருந்தை 12 காலன் (55 லிட்டர்) தண்ணீரில் நனைத்து நடவேண்டும்.

மேற்கூறிய வழிகளை பின்பற்றினால் கரணைகளின் முளைக்கும் சக்தி நிச்சயமாய் 70–75 சதவிகிதத்திற்கு குறையாமல் இருக்கும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. இதன் விளைவாக நல்ல முளைப்பும், வீரியமும் கூடிய பயிரை எடுக்கலாம்.

Phone : 24558, 34251, 63746. Grams : 'VENPALCO'

விவசாய பெருமக்களுக்கு வேண்டுகோள்

குறைந்த உழைப்பில்
நிறைந்த ஊதியத்தை
உழவர்களுக்கு தருவது

கஜலக்ஷ்மி கலப்பு உரமும்

ராமன்ஸ் நவீன விவசாயக் கருவிகளும்

தயாரிப்பாளர் :

வி. வேணுகோபால் பிள்ளை & கோ.

ராமன்ஸ் எஞ்ஜினியரிங் ஒர்க்ஸ்

தலைமை ஆபீஸ் :
நெ. 2/27, பிராட்வே, சென்னை-1.

கிளைகள் :

1. நெ. 36, ஆசூரித் தெரு, திருவள்ளூர்.
2. நெ. 14-F, பழைய பண்ருட்டி சாலை, விழுப்புரம்.
3. நெ. 55, ஹபீப் பஜார், ரெட்டியில்ஸ், சென்னை-52.

மற்றும் எல்லா ஊர்களிலும் உள்ள எங்கள் ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

ஒரு முறை உபயோகித்தால் சிறப்பு தெரியும்

விற்பனை ஏஜெண்டுகள் தேவை

செங்கரஸ் கிளாக்கஸ் ஓர் சிறந்த தீவனப்புல்

V. G. பழனியாண்டி, B. Sc. (Ag.), K. P. இராமசாமி, B. Sc. (Ag.).

இது பொதுவாக எல்லோராலும் ப்ளூ பஃபெல் அல்லது ஆஸ்த்திரேலியப் புல் என்றும் அழைக்கப்படுகிறது. இது வறட்சியை தாங்கக் கூடியது. நீண்ட நாட்கள் இருக்கக் கூடிய ஒரு புல். புற்கள் எப்பொழுதும் பசுமையாகவே இருக்கும. இதை மானுவாரியாகவும், பாசனமளித்தும் பயிர் செய்யலாம்.

இனவிருத்தி முறை

1. புல்லின் துண்டுகள் (கட்டைகள்) (Slips) எடுத்து நடுதல்.

2. விதைகள் மூலமும் இனவிருத்தி செய்யலாம்.

இதில் மானுவாரியாக பயிர் செய்யும்போது விதை விதைத்தும், பாசனப் பகுதிகளில் (Slips) கட்டைகள் மட்டும் பயிர் செய்வதும் சாலச் சிறந்தது.

மானுவாரி முறை [மேய்ச்சல் காடுகளுக்கு.]

மேய்ச்சல் நிலம் என்பது மாடுகள் மேயக்கூடிய நிரந்தரமான புல் தரையாகும். ஆண்டுக்கு 5–6 தடவைகள் அறுவடை செய்யலாம்.

விவசாய ஆராய்ச்சி நிலையம் மண்வளம் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இப்புல்லானது வருடத்திற்கு எக்கர் ஒன்றிற்கு 30,000 கிலோ கிராம் வரை பச்சைத் தீவனம் கொடுத்திருக்கின்றது.

மேற் கூறிய காரணங்களால் இந்த புல்லை பாசனப் பயிராக சாகுபடி செய்தால் லாபகரமாய் இருக்கும். இப் புல்லின் விதைகளும் கட்டைகளும் (Slips) பவானி சாகரில் உள்ள விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் கிடைக்கும்.

விதைகள் 1 கி.கி. விலை ரூ. 2

கட்டைகள் 1,000 Slips (கட்டைகள்) ரூ. 1·25·

1. புல்லின் தன்மை 2. மழை அளவும், மண் ஈரமும் 3. நிலத்தன்மை 4. மேய்ச்சல் இடைவெளி, இவைகளைப் பொருத்தே புல் தரையும் அமையும்.

வருடம் பூராவும், பெய்யும் சராசரி மழையானது இயற்கையாக மேய்ச்சல் காடுகளை வளமுடையதாக்கின்றது. கோவை மாவட்டம், தாராபுரம் தாலூக்காவில், 'செங்கரஸ் சிலியாரிஸ் (வெள்ளை கொளுக்கட்டை)' என்னும் புல் வகையானது அதிகமாக சாகுபடி செய்யப்படுகின்றது, செங்கரஸ் ஸிலியாரிஸ் பயிர் செய்யும் இடங்களில் அதற்கு பதிலாக மானுவாரியாக 'செங்கரஸ் கிளாக்கஸ்' சாகுபடி செய்யலாம். மேற்கூறிய இருவகைப் புற்களின் பலனைக் காண, விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, பாவனி சாகரில் ஓர் சோதனை நடத்தப்படுகிறது. சோதனையின் முடிவில் செங்கரஸ் ஸிலியாரிஸ் வகையானது வருடத்திற்கு ஒரு எக்கர் மானுவாரியிலிருந்து 8,000 கிலோ கிராமும், செங்கரஸ் கிளாக்கஸ் 13,000 கிலோ கிராமும் பச்சைத் தீவனம் கொடுக்கின்றன.

நல்ல மேய்ச்சல் தரையை உண்டாக்கி நிலம் நன்றாக உழப்பட்டு, எக்கருக்கு 3–5 கிலோ கிராம் விதைகளை மழை பெய்யுமுன் விதைக்க வேண்டும். மழைக்குப் பிறகு விதைகள் முளைத்து, மூன்று மாதங்களில் பூப்பருவம் வரும். அப்பொழுது (பூத்த பருவத்தில்) மாடுகளை மேய விடலாம்.

பாசனச்சாகுபடி:—நிலம் நன்றாக உழப்பட்டு, எக்கருக்கு 10 டன் வீதம் தொழு உரம் இட்டு கலக்க வேண்டும். வயல் பாத்திகளாகவும், வாய்க்கால்களாகவும், அமைக்கப் படவேண்டும். நடுவதற்கு தயாரிக்கப்பட்ட கட்டைகளில் (Slips) வேர்கள் பழுதாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தண்ணீர் பாய்ச்சிய பிறகு கட்டைகள் $1\frac{1}{2}' \times 2\frac{1}{2}'$ இடைவெளி விட்டு நட வேண்டும். 10 நாட்களில் தளிர்க்க ஆரம்பித்துப் பின் $1\frac{1}{2}$ மாதத்தில் பூக்க ஆரம்பிக்கும். இரண்டாவது மாதத்தில் புற்களை வெட்டி பச்சையாக மாடுகளுக்குக் கொடுக்கலாம். இம்மாதிரி ஒவ்வொரு தடவையும் புற்களை வெட்டியவுடனே பயிருக்கு எக்கருக்கு 40 சத விகிதம் தழைச்சத்து உரம் போடுவது சிறந்த பலனை அளிப்பதாகவும் இருக்கும். இதற்கு வாரமொரு முறை நீர்பாச்சலாம்.

' சைலேஜ் " கால்நடைகளுக்கோர் இன்சுவை உணவு

P. R. ராமச்சந்திரன், T. தேவதாஸ்,
A. S. கிருஷ்ணமூர்த்தி—விவசாயக் கல்லூரி, கோவை

நாம் விரும்பிச் சாப்பிடும் பாலைத்தரும் பசுவிற்கும் நமக்கு உழைக்கும் எருதிற்கும் அவை விரும்பும் தீவனத்தை அளிப்பது நமது கடமையல்லவா ? கால்நடைகள் பெரிதும் விரும்பி உண்பது பசுந்தழைகளையே. மாரிக் காலத்தில் கிடைக்கும் பசுந்தழைகளும் தாள்களும் கோடைகாலத்தில் கிடைப்பதில்லை. ஆகையால் மாரிக் காலத்தில் கிடைக்கும் பசுந்தழைகளை "சைலேஜ்" செய்து சேமித்து வைத்தால் அவை கோடை காலம் வரை பசுமை குறையாமல் இருக்கும். அதோடு மாரியில் கிடைக்கும் அபரிமிதமான தழைகள் விணுகாமல் சேமித்து வைக்கப்பட்டதாகவும் இருக்கும். அதோடு மாரியில் கிடைக்கும் அபரிமிதமான தழைகள் வீணுகாமல் சேமித்து வைக்கப்பட்டதாகவும் இருக்கும்.

பல இடங்களிலும், கோடை காலத்தில் தங்கள் கால் நடைகளுக்கு நல்ல தீவனம் ஊட்ட முடியவில்லையே என வருந்தும் விவசாயிகள் இம்முறையைத் தெரிந்து கொள்ளுதல் மிகவும் நல்லது.

எள்ளுச் செடியின் "வைரஸ்" நோய்கள்

(ச. பாஸ்கரன், கோ. கௌசல்யா, சி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பூசண இயல் பிரிவு.)

இந்தியாவில் பயிரிடப்படுகின்ற எண்ணெய் வித்துக்களில் எள்ளுப் பயிர் முக்கியமானது. சென்னை மாகாணத்தில் இப்பயிர் சுமார் மூன்று லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் ஆண்டு தோறும் பயிரிடப்படுகிறது. இந்த எள்ளுப் பயிர் "ஃபில்லோடி" (Phyllody), இலைச் சுருட்டை (Leaf curl) முதலிய வைரஸ் நோய்களாலும், இலைப் புள்ளி, தண்டு அழுகல், வேர் அழுகல் முதலிய பூஞ்சண நோய்களாலும் தாக்கப்படுகின்றன. இந்த நோய்களால் எள்ளுப் பயிரில் 20 சதவிகிதம் வரை மகசூல் குறைகிறது.

ஃபில்லோடி (Phyllody)

இந்த நோய் "வைரஸ்" எனும் நுண் கிருமியால் உண்டாகிறது. எள்ளுப் பயிர் வருடம் தோறும் பயிரிடுகின்ற இடங்களில் இந்த நோயினால் மகசூல் மிகுந்த அளவில் குறைகிறது.



"ஃபில்லோடி"

நோயின் அறிகுறிகள்

எள்ளுச் செடி பூக்க ஆரம்பிக்கும் பருவத்தில் இந் நோய் தாக்கி பூவின் பாகங்களை பச்சை நிறமுள்ள இலை வடிவங்களாக மாற்றிவிடுகின்றன. ஐந்து புற இதழ்களும் (Calyx) பூவிதழ்களும் நோயின் தன்மையைப் பொறுத்து பாதி அல்லது முழு பச்சை நிறமாகவும், இலை போன்று மாறி சிறுத்து விடுகின்றன. இத்தகைய பூக்களில் காய்கள் பிடிப்பதில்லை. அதனால் மகசூல் குறைகிறது.

நோயால் தாக்கப்பட்ட செடிகளின் இலைகள் மிகச் சிறிய தாகவும், நரம்புகள் வெளுப்பாகவும் இருக்கின்றன. கணுக்களின் இடைவெளிகள் குறைவாகவும், அதிகமான கிளைகள் உடையதாகவும் இருக்கின்றன. செடியின் மேல் பாகம் கனத்த கொத்தாக மாறி கீழ் நோக்கி வளைந்து காணப்படும். பூக்களும் புதிய தண்டுகளும் நெருக்கமாக தோன்றி, செடிகள் தலைக்கொத்து நோயால் தாக்கப்பட்டது போல் தோன்றுகின்றன. நோயால் தாக்கப்பட்ட பாகங்களில் தோன்றுகின்ற காய்களில் சுருக்கமிக்க, முளைக்கும் தன்மையற்ற விதைகள் உண்டாகின்றன.

பரவும் முறை.

இந்நோய் தத்துப்பூச்சி "டெல்டோசெபாலஸ்" (Deltocephalus) என்னும் பூச்சியால் ஒரு செடியிலிருந்து மற்ற செடிகளுக்கும் பரவுகின்றன.

தடுப்பு முறைகள்

(1) "பாலிடால்", "என்டிரின்", "மாலதையான்" என்னும், பூச்சி மருந்துகளை தெளித்து நோயைப் பரப்புகின்ற பூச்சிகளை அழிக்கவேண்டும்.

(2) நோய் தாக்கப்பட்ட செடிகளை உடனுக்குடன் களைந்து, எரித்தல் வேண்டும்.

(3) களைகளில்லாது பார்த்து வரவேண்டும்.

இலைச்சுருட்டை நோய் (Leaf curl)

இந்த இலைச் சுருட்டை நோயும் ஒருவித வைரஸினால் உண்டாகிறது. எள்ளுச் செடியின் மகசூல் அதிக அளவில் குறைவதற்கு இந்நோய் முக்கிய காரணமாகும்.

(15-ம் பக்கம் பார்க்கவும்)

சம உயரக் கரைகளின் பராமரிப்பு

[க. து. வேதாசலம், பி.எஸ்ஸி. (எஜி.,) உதவி விவசாயப் பொறியாளர், திருச்செங்கோடு.]

தற்சமயம் புஞ்சை நிலங்களில் மண்வளத்தைக் காக்க சம உயரக் கரைகள் அமைப்பது போன்ற மண்வளப் பாதுகாப்பு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு செய்யப்படும் நுட்பமான மண்வளப் பாதுகாப்பு வேலைகளின் வெற்றியானது, அதன் பிற்கால பராமரிப்பைப் பொருத்ததாகும். திட்டமிட்டபடி சம உயரக் கரைகளை சரியானபடி பராமரிக்கா விட்டால் மண்ணும் அதன் ஈரமும் சரிவர பாதுகாக்கப்படாது. மேலும் அதிக உடைப்புக்களும் ஏற்பட்டு மண், நீர் இவைகளும் நஷ்டமாகும். இதனால் மண்வளம் குன்றி பயிர் விளைச்சல் பாதிக்கப்படும். நன்முறையில் பராமரிக்கப்பட்ட கரையுள்ள வயல் வருடத்திற்கு வருடம் அதிகப்படியான விளைச்சலைத் தருவதுடன் மண் வளத்தை நிரந்தரமாக பாதுகாக்கவும் ஏதுவாகிறது. ஆகவே, இந்த வரப்புகளை பராமரிப்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். சிறந்த முறையில் பராமரிக்க கீழ் காணும் முறைகளைக் கையாளுங்கள்.

1. கால் நடைகள் கரைகளின் மேல் நடந்தும், வண்டிகள் போய் வருவதைத் தவிர்க்கவும் நல்ல வேலி அமைத்தல்.

2. எலி வளைகளை மூடி எலி பிடிக்க வெட்டிய கரைகளை சீர் செய்தல்.

3. வயலிலுள்ள வெட்டுக் குழிகளை உழுது சீர் செய்தல்.

4. கரைகளை சீர் செய்து பலப்படுத்தல்.

5. கரைகளின் மீது புற்கள் மற்றும் பல்லாண்டு வாழும் தாவரங்களையும் வளர்த்தல்.

1. வேலியிடுதல்.—ஒரு நிலத்தில் கரை போட்ட பிறகு கால் நடைகள் கரையின் மேல் சென்று அழிக்கா வண்ணம் கவனித்துக் கொள்ள வேண்டும். சமவெளியில் கரை போடப்பட்ட இடங்களில் சீமைக் கருவேல், புங்கம் முதலிய மரங்களை 20 அடி இடைவெளிகளில் நட்டு வளரச் செய்து வயலின் எல்லையைச் சுற்றி உயிர் வேலி அமைக்கலாம். பிற் காலத்தில் காற்றின் தாக்குதலிலிருந்து பயிர்களை பாதுகாக்கிறது. தேவையான அளவு உயரம் வளர்ந்த பிறகு சீமைக் கருவேலின் கிளைகளை வெட்டி விடலாம். மனிதர்கள், வண்டிகள் கரைகளில் போய் வருவதால் கரைகளில் உடைப்பு ஏற்படாமலிருக்க கரையை பலப்படுத்தவும்.

2. எலி வளைகளை மூடி எலி பிடிக்கவெட்டிய கரைகளை சீர்செய்தல்.—விவசாயி தனது நிலத்தைச் சுற்றிப் பார்க்க செல்லும் போது கரைகளிலுள்ள எலி வளைகளை அடைப்பதில் கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிடில் அந்த எலி வளைகளில் மழை நீர் தேங்கிவிடும். கரை, நீரில் நன்கு ஊறி உடைப்பும் ஏற்படக் காரணமாகிறது. இதைத் தடுக்க எலி வளைகளை அவ்வப்போது மூடி விட வேண்டும். எலிப்பாஷாணம் (ஜிங்க் பாஸ்பைடு), எலிப் பொறிகள் வைத்து எலிகளை அழிக்க வேண்டும். எலிகளால் ஏற்படும் நாசத்தை விட எலி பிடிப்பவர்களால் ஏற்படும் சேதம் அதிகம். அவர்கள் எலி பிடிப்பதற்காக கரைகளை எளிதில் வெட்டி விடுகிறார்கள். இதனால் பெரிய துவாரங்கள் ஏற்பட்டு கரை பாழாகிறது. இதற்குப் பிறகு மழை நீர் அக் குழிகளில் தேங்கி கரையை ஊறவைத்து உடைப்புகள் ஏற்பட காரணமாகிறது. அதனால் வெட்டிய கரைகளை மிக்க கவனத்துடன் சீர் செய்ய வேண்டியது மிக அவசியம்.

3. வயலிலுள்ள வெட்டுக்குழிகளை உழுது சீர் செய்தல்.—கரை போடப்பட்ட பிறகு கரைகளின் பக்கங்களிலும் ஓரங்களிலும் உழக் கூடாது. ஆரம்ப உழவு செய்யும் போதே வெட்டுக் குழிகளையும் உழ வேண்டும். இதனால் அவைகள் நாளடைவில் மூடிவிட ஏதுவாகும். குறுகிய காலத்தில் வெட்டுக்குழி உள்ள இடங்கள் மீண்டும் நல்ல நிலவளமுடையதாகக் செய்ய அவ்விடங்களில் அதிக அளவு கம்போஸ்ட் உரம் போட வேண்டும். விவசாயிகள் கரைகளின் பக்கங்களையும் அடிப்பாகத்தையும் நெருக்கி உழவு செய்யும் பழக்கம் கொண்டிருப்பதால் அதன் பயனாக கரைகள் சிறிதாகி விடுகின்றன. நாளடைவில் சிறிய அடிப்பாகம் கொண்ட இந்தக் கரைகள் நிலைத்து நிற்காமல் மழைக் காலத்தில் விழுந்து விடுகிறது. ஆகையால் விவசாயிகள் கரைகளின் அடிப் பாகம் வரையிலும் உழவு செய்யாமலும், கரைகளின் பக்கச் சரிவுகளை உழவு செய்யாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.—

4. கரைகளைச் சீர்செய்து பலப்படுத்தல்.—கரைகள் எங்கெங்கு அழிந்து காணப்படுகிறதோ அங்கெல்லாம் கரைகளை பலப்படுத்த வேண்டும். மழைக்குப் பிறகு சில இடங்களில் தண்ணீர் அதிக அளவில் தேங்கி நிற்குமேயானால் அங்குள்ள கலிங்குகள் மூலமாக அல்லது நீர் போக்கி (outlet) மூலமாகவோ, தண்ணீரை கவனமாக வெளியேற்ற வேண்டும். அப்படி இன்றி விவசாயி கரையை உடைத்து தண்ணீரை வெளியே விட்டால், அது பலமாக அடுத்த கரையை தாக்கி உடைப்பு உண்டாக்கி, மேலும் அங்கிருந்து மிக வேகத்துடன் சென்று கீழே போடப்பட்டுள்ள கரைகளிலும் உடைப்பு ஏற்படுத்தும். நீர்ப்பரப்பு பகுதியின் மேல் மட்டத்தில் கரையுள்ளவர்கள் மிக பொறுப்புள்ளவர்களாவார்கள். மேலும் ஒவ்வொரு மழைக்குப் பிறகும் நீர்வடிகாலின் இயற்கைப் பாதையை விவசாயி கவனித்துக் கொண்டு, வயலில் கிடைக்கும் கற்களைக் கொண்டே சிறு கலிங்குகள் ஏற்படுத்திக் கொள்ளலாம். அதாவது நில மட்ட உயரத்திலிருந்து ஒரு அடி உயரம் வைத்து கரையை வெட்டிவிட்டு, வெட்டப்பட்ட பாகத்தில் பெரிய கற்களைக் கொண்டு தடுப்புச் சுவராக அமைக்க வேண்டும். பக்கங்களிலும் கற்களை நன்கு பதிக்க வேண்டும், இதுபோலவே மேல் பக்கத்தி

லும், கீழ் பக்கத்திலும், அமைக்க வேண்டும். கற்கள் பரவப்பட்ட இடங்களில் புல் விதைகளை விதைப்பது மிகவும் சிறந்தது. கற்களின் இடைவெளிகளில் புற்கள் வளர்ந்து நாளடைவில் கட்டிடத்தையே நன்ருக கெட்டியாக பிடித்துக் கொள்ளும். நீர் வெளியேற்ற இச் சிறு கலிங்குகளை குறைந்த செலவில் அமைக்கலாம். மண் வளப் பாதுகாப்பு திட்டப்பகுதிகளில் தேவைப்படுமிடங்களிலெல்லாம் கலிங்குகள் கட்டப்பட்டு வருகின்றன. இம்மாதிரி கலிங்குகள் கட்டப்படாத இடங்களில் இந்த முறையை பின்பற்றுதல் நலம். கலிங்குகளை பராமரிப்பது கரையைப் பராமரிப்பது போலவே முக்கியமானது. விவசாயிகள் கலிங்குகளில் நீர்கசிவுகள் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். கலிங்கின் மையச் சுவர் பகுதி (body wall) யிலோ அல்லது பக்கப்பகுதிகளிலோ கசிவு அல்லது துவாரம் இருக்கக் கண்டால் உடனடியாக அதை அடைத்து கசிவு ஏற்படாவண்ணம் சீர் செய்ய வேண்டும். இல்லாவிடில் நீர் உள் நுழைந்து கட்டிடத்தையே பாதித்து விடும். கலிங்கின் மையச் சுவர் பகுதி வரையில் நிறைய வண்டல் மண் படிந்திருந்தால் அதை அவ்வப்போது எடுத்த வயலின் பள்ளமான பக்கங்களில் இரைக்கலாம். வெள்ளத் தாரை உள்ள இடத்தை திருத்த சிறு அணை கட்டுமிடங்களில் அதிக வண்டல்' மண் படியும் இடமாயிருந்தால் (மையச் சுவர்பகுதி) தடைப்பாளை உயர்த்த வேண்டும்.

5. **கரைகளின் மேல் புற்களையும் நீண்ட நாள் தாவரங்களையும் வளர்த்தல்.**—மழையின் நேரடி தாக்குதலிலிருந்த கரையை பாதுகாப்பது அவசியம். நிலத் தன்மையைப் பொறுத்து நன்கு வளரும கொழுக்கட்டைப் புல் மற்றும் உள்ளூர் வகைகளையும் கரைகளின் மேல் நடலாம். மழையினுல் கரை நன்கு ஈரம்பட்டதும், பருவ காலம் ஆரம்பிக்கும் போதே இந்த புல் விதைகளை விதைக்க வேண்டும். அவைகளின் வேர்கள் நன்கு வளர்ந்து, கரைகளை நன்கு மூடிக்கொண்டு நீண்ட காலத்திற்கு மழையின் தாக்குதலிலிருந்து கரையை காப்பாற்றுகிறது. மேலும் அவைகளை கால்நடைகளுக்குத் தீவனமாகவும் கொடுக்கலாம். பருவ மழை காலத்தில் கரையின் இரு பக்கங்களிலும் மாறிமாறி மூன்று அடி இடை வெளியில் ஆமணக்கு விதைகளை ஊன்றலாம். ஆமணக்கு கரைக்கு போதிய பாதுகாப்பு அளிப்பதுடன் அதன் விதைகள் மூலம் விவசாயிக்கு ஓரளவு வருமானத்தையும் தருகிறது. நீண்ட காலப் பயிரான "சிவப்பு மொச்சை" விதைகளை இதே போல் கரைகளின் இரு பக்கங்களிலும் மூன்று அடி இடைவெளிக்கு ஒன்ருக நடவேண்டும். இது கரையை பாதுகாப்பதுடன் மகசூல் மூலம் விவசாயிகளுக்கு வருமானம் கிடைக்கிறது. எந்த விதத்திலும் கரைகளை புல், இதர செடிகளின்றி விடக்கூடாது. பயறுவகைகளை கரைகளின் மேல் வளர்ப்பதால் கரை பாதுகாக்கப்பட்டாலும், பயிர்களின் அறுவடைக்குப் பிறகு கரையின்மேல் பகுதி நாசமடைகிறது. ஆகவே புல் அல்லது நீண்ட காலப் பயிர்களையே கரையின் பகுதிகளில் வளர்ப்பது நல்லது.

மண்வளத்தை சரிவரப் பாதுகாக்க மண்வளப் பாதுகாப்பு முறைகளைக் கையாளுவதுடன சம உயரக் கரைகளையும் மேற்கூறியவாறு பழுதின்றி பராமரிப்பது மிக அவசியம். நாட்டின் சிறந்த செல்வமான வளமான மண்ணை பாதுகாத்து நவின சாகுபடி முறைகளைக் கையாளுவதே அதிக உணவு உற்பத்திக்கு தலை சிறந்த வழியாகும்.

நிலக்கடலைக்கு சிக்கனமாக பாசனம் அளியுங்கள்

அதிக அளவில் இறைவை நிலக்கடலை பயிர் செய்யும தென்ஆற்காடு, தஞ்சாவூர், மதுரை, கோயமுத்தூர் மாவட்ட விவசாயிகளுக்கொரு நற்செய்தி !

டி. எம். வி. 2, டி. எம். வி. 4, டி. எம். வி. 6 போன்ற கொத்து நிலக்கடலைக்கு 10 நாட்களுக்கொரு முறை பாசனமளித்தால் போதும்; நல்ல பலன் கிடைக்கிறது. இது சம்பந்தமான பாசன ஆராய்ச்சிகள் பாலூர் விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் செய்யப்பட்டன 10, 15, 20, 25 நாட்கள் இடைவெளியில் நிலக்கடலைக்கு பாசனமளித்து பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 10 நாட்களுக்கொரு முறை தண்ணீர் பாய்ச்சிய கடலைப் பயிரே சிறந்த மகசூல் கொடுத்தது. நிலக்கடலைச் செடி பரந்த வேர் அமைப்பை உடையது. வறட்சி தாங்கக் கூடியது. ஆதலால் பாசன நீரை வீணாக்காது சிக்கன முறையில், அதாவது 10 நாட்களுக்கொரு முறை பாசனமளித்து. சிறந்த மகசூல் எடுங்கள்.

[13-ம் பக்கம் தொடர்ச்சி]

நோயின் அறிகுறிகள்

இந் நோயால் தாக்கப்பட்ட எள்ளுச் செடியின் இலைகள் கீழ் நோக்கி சுருண்டு காணப்படுகின்றன. அடிப் பாகத்தில் உள்ள நரம்புகள் தடித்து காணப்படுகின்றன. நோயால் தாக்கப்பட்ட செடியின் இலைகள் சிறியதாகவும் தடித்தும் அடர் பச்சை நிறமாகவும் இருக்கின்றன. இந்நோய் செடியின் ஆரம்ப காலத்தில் தாக்கினுல், செடிகளின் வளர்ச்சி மிகக் குன்றியும் காய்கள் மிகக் குறைந்தும் தோன்றுகின்றன. இலைச் சுருட்டை நோய் சாதாரணமாக ஆறு வாரம் ஆன எள்ளுச் செடிகளைத் தாக்க ஆரம்பிக்கிறது. இரண்டு வாரங்களில் நோய் முழுமையாகப் பரவி விடுகிறது. இதனுல் குறைவான பூக்களே தோன்றுகின்றன. அதனுல் மகசூல் மிகுந்த அளவில் குறைகிறது.

பரவும் முறை

இந்நோய் "பெமீசியா டபாகை" (Bemisia tabaci) என்னும் ஒருவித வெள்ளைப் பூச்சியால் ஒரு செடியிலிருந்து மற்ற செடிகளுக்குப் பரவுகின்றன.

தடுப்பு முறைகள்

(1) "பாலிடால்", "என்டிரின்" போன்ற மருந்துகளை வாரந்தோறும் தெளித்து வந்தால் நோயை பரப்புகின்ற பூச்சிகளை அழித்து நோய் பரவாது தடுக்கப்படுகிறது.

(2) இந்நோய் தாக்கப்பட்ட செடிகளைக் களைந்து எரித்தல் வேண்டும்.

(3) களைகள் இல்லாமல் பார்த்து வரவும்.

இந்நோய்கள் வராது தடுத்து எள்ளுப் பயிரின் விளைச்சலை அதிகப்படுத்துங்கள்.

மாதிரிப் பழப்பண்ணை, குற்றாலம்

[கே. கே. அனந்தநாராயணன், பி. எஸ்ஸி. (விவசாயம்), டி. ஐ. எச்.,
உதவி தோட்டக்கலை நிபுணர் (பழ அபிவிருத்தித் திட்டம்), கோயம்புத்தூர்.
எல். ஆர். வைத்தியநாதன், தோட்டக்கலை உதவியாளர், மாதிரிப்பண்ணை, குற்றாலம்.]

திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசிக்கருகே மேற்குத் தொடர்ச்சி மலையடியில் கடல் மட்டத்திலிருந்து 550 அடி உயரத்தில் உள்ளது குற்றாலம். இங்கு ஜாதிக்காய், இலவங்கம், காபி ஆகியவையும் மங்குஸ்தான் போன்ற பழவகை மரங்களும் பயிரிடப் படுகின்றன.

இயற்கை எழிலும் நீர்வளமும் பொருந்திய இவ்வூரில் 1950-ம் ஆண்டிலிருந்து விவசாய இலாகாவின் ஒரு மாதிரி பழப்பண்ணை, நாற்றங்கால் இயங்கி வருகிறது. இது 25 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது.

இப் பண்ணை—

(1) திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் விவசாயிகளுக்கு அவர்களது பகுதிக்குத் தகுந்த அதிக மகசூல் தரும் உயர்ந்த ஜாதிப் பழக் கன்றுகளை வழங்கிவருகிறது.

(2) இப்படி சாகுபடியில் புதிய விஞ்ஞான முறைகளை நேரில் கண்டுபிடித்துக் காண்பித்து, ஒரு மாதிரிப் பண்ணையாக விளங்குகிறது. இதன்மூலம் ஏற்கெனவே பழத் தோட்டம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு அதிக மகசூல் கிடைக்க உதவிவருகிறது.

இப்பண்ணையின் சிறந்த அம்சம், சமவெளியில் பயிராகும் மா, பலா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, பப்ளிமாஸ், மாதுளை முதலிய பழச் செடிகளுடன் மலைச் சரிவுகளில் பயிராகும் இலவங்கம், ஜாதிக்காய், மிளகு, ஏலம் ஆகிய வாசனை திரவியச் செடிகளும், லிச்சி, மங்குஸ்தான், மணி ஆரஞ்சு, அவகாடோ, ரம்புடான், பன்னீர்க் கொய்யா முதலிய பழச் செடிகளும் பான வகையில் உயர்ந்த கோகோ செடிகளும் பயிரிடப்படுகின்றன.

நம் மாநில பாக்கு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இப்பண்ணையிலிருந்து உயர்ந்த பாக்குக் கன்றுகளும் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு மலிவாக விற்கப்படுகின்றன. பலவகை செடிகளை உற்பத்தி செய்து இதுவரை 22,963 செடிகளை விற்பனை செய்தது மட்டுமல்லாமல், இத்துடன் காய்கறி விதைகளில் உயர்ந்த ஜாதி விதைகளை ஊடு பயிராக விதைத்து 1-4 கிலோகிராம் விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளது. இக்குறுகிய காலத்தில் செடி, விதைகள், மூலம் கிடைத்த வருமானம் ரூ. 17,406 ஆக உயர்ந்திருக்கிறது. பழவகை மரங்களிலிருந்தும் பலன் தரும் பருவம் வந்தால் பன்மடங்கு வருமானம் பெருகும் என்பதில் சற்றேனும் ஐயமில்லை.

இவ்வாறு நம் மாநில விவசாய இலாகாவினர் விவசாயிகளுக்கு நல்ல பழச் செடிகளும், மலைச் சரிவுகளில் பயிர் செய்யப்படும் செடிகளும் அவர்களது இடங்களுக்குத் தக்கவாறு விநியோகிக்கப்பட்டு அவர்கள் நல்ல மகசூல் அடையும்படி செய்கிறார்கள். இக்கருத்தை மனதில் கொண்டு விவசாய அலுவலகங்களின் மூலமாகவோ, அல்லது நேரிலோ வந்து தங்களுக்குத் தேவையான கன்றுகளை வாங்கி நாட்டு உற்பத்தியைப் பெருக்க வாரீர் ! வாரீர் !

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம் :

ராஜா பண்ணைத் தோட்டம்

இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி

வெண்டை

மிகப் பெரிய நீண்ட சதை பருத்த ருசி
மிகுந்த அதிசய ஜாதி

கொத்தவரை

ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற

கத்தரி

புகழ் பெற்ற பெரிய ரோஜா உருண்டை பல்லாரி

வெங்காயம்

இதர பலவித உயர்ந்த கோடை மிளகாய், முள்ளங்கி
ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான
காய்கறி விதைகள், பழச் செடிகள், தென்னங்
கன்றுகள், களை நாசினிகள்

கிடைக்குமிடம் :—

ராஜா பண்ணைத் தோட்டம்

தபால் பெட்டி எண் 1423, சென்னை-17.

தந்தி : RAJSEED
போன் : 42262

வருமுன் காப்போம்

கே. எஸ். சுப்பிரமணியன் & சி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பூசண இயல் பிரிவு,
விவசாய ஆராய்ச்சிக்கூடம், கோயமுத்தூர்-3.

வியாதி வந்த பின்பு குணப்படுத்த முயற்சிப்பதைவிட வியாதி வராமல் தடுப்பது மிகவும் சிறந்தது. இந்தப் பழமொழியின் கருத்து தாவரங்களுக்கு ஏற்படும் நோய்களைத் தடுக்கும் விஷயத்திலும் மிகவும் பொருத்தமானதாகும்.

தாவரங்களுக்கு முக்கியமாகப் பூசணம் (Fungus), பாக்டீரியா (Bacteria), வைரஸ் (Virus) போன்ற நுண்ணுயிர்களால் நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றின் உருவமும், தன்மையும் எப்படி இருந்த போதிலும், தாவர வர்க்கத்துக்கு இவற்றால் ஏற்படக்கூடிய சேதம் மிகவும் அதிகம். இயற்கையில் இவைகள் விருத்தியாகும் தன்மையே ஒரு விந்தை! கால சூழ்நிலை சரியாக இருக்கும் பொழுது இவை அதிக அளவில் பெருகி பெரு நஷ்டத்தை விளைவிக்கின்றன. தாவர வர்க்கம் நோயால் பாதிக்கப்படுவதால் தாவரத்தை நம்பியிருக்கிற நாமும் மற்ற உயிர்களும் இதனால் பாதிக்கப்படுகிறோம். தாவரங்களை நோய்களிலிருந்து காப்பாற்றினால்தான் நாமும், மற்ற உயிர்களும் உயிர் வாழ முடியும். அதற்கான முயற்சிகளை நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். தகுந்த சமயத்தில் சரியான முறையில் தடுப்பு முறைகளைக் கையாண்டால் நிச்சயமாக நோய்களைத் தடுக்க முடியும். தாவரங்களுக்கு ஏற்படும் ஒவ்வொரு நோயும் எப்படி ஏற்படுகின்றது, எப்படிப் பரவுகின்றது, எந்த சமயத்தில் தடுப்பு முறைகளைக் கையாள வேண்டும் என்ற விபரங்கள் பற்றி நன்கு ஆராயப்பட்டிருக்கின்றன. தகுந்த சூழ்நிலையும், சரியான காலநிலையும் இருக்கும்போது, இந்த நோய்கள் வெகு சீக்கிரமாகப் பரவுகின்றன. அப்படி வேகமாகப் பரவும் காலங்களில் நாம் தடுப்பு முறைகளைக் கையாளும் பொழுது மனிதனுக்கும், நோய்க்கும் ஒரு போராட்டம் ஏற்படுகின்றது. அதில் சில சமயம் மனிதன் தோல்வியடைகின்றான். அதனால் நோய்வரும் என்ற சந்தேகம் ஏற்படும் பொழுதே முன்னெச்சரிக்கையாகத் தடுப்பு முறைகளைக் கையாளுவது சாலச் சிறந்தது.

தாவர நோய்கள் முக்கியமாகத் தண்ணீர், காற்று, மண், விதை, பூச்சிகள் முதலியவைகள் மூலம் பரவுகின்றன. நோய்களும் பலவகைப்பட்டதாக இருக்கின்றன. இவை புள்ளி நோய் (Leaf spot), வாடல் நோய் (Wilt), அழுகல் நோய் (Rot), கரிப்பூட்டை நோய் (Smut), சொரி நோய் (Rust and Canker), பசுங்கதிர் நோய் (Green ear), சாம்பல் நோய் (Powdery mildew), செவட்டை நோய் (Downy mildew) போன்ற வகைப்படும்.

புள்ளி நோய், சொரி நோய், சாம்பல் நோய் முதலியன முக்கியமாகக் காற்று மூலம் பரவுகின்றன. நோயின் வித்துக்கள் காற்றின்மூலம் தூக்கிச் செல்லப்படும்பொழுது தாவரத்தின் பாகங்களில் விழுகின்றன. வித்துக்கள் அங்கு முளைத்து தாவரத்தின் உட்சென்று அதையே உணவாகக் கொண்டு விருத்தியடைகின்றன. நாம் இந்நோயைக் கண்டறிந்து தடுப்பு முறைகளைக் கையாள ஆரம்பிக்கும்பொழுது சில சமயம் நோய் அதிக அளவில் விருத்தியடைந்து மருந்து அடித்தாலும் பிரயோசனப்படாது என்ற அளவுக்குப் பரவி விடுகின்றது. அதனால் நோய் தாவரத்தின் உட்சென்றுவிட்டால் அதைத் தடுப்பது கஷ்டமாகி விடுகின்றது. ஆரம்பத்தில் தடுப்பது சுலபம். நோய் பரவி விட்டால் நமது போராட்டத்தில் நாம் வெற்றியடைவது கடினம். உதாரணமாக, நெல்லின் குலைநோய் (Paddy blast), உருளைக் கிழங்கின் அழுகல் நோய் (Late blight of Potato), நிலக்கடலையின் 'டிக்கா' புள்ளி நோய் (Tikka leaf spot), சோளத்தின் சொரி நோய் (Rust) முதலியவற்றைச் சொல்லலாம். இவற்றை வருமுன் காப்பதற்காக முன்னெச்சரிக்கையாகவே ஒரு சதம் போர்டோ கலவை, டைதேன் (Dithane) அல்லது வேறு செம்பு (Copper) சேர்ந்த ஏதாவது ஒரு பூசண மருந்தை தாவரத்தில் தெளித்தால் அவை தாவரத்தின் மேல் நன்கு படிந்து விடுகின்றன. இவற்றின் மேல் நோயின் வித்துக்கள் விழும்பொழுது, வித்துக்கள் முளைக்காமல் அழிந்து விடுகின்றன. இதனால் நோய் ஏற்படுவது தடுக்கப்படுகின்றது. நோய் இல்லாத காலங்களில் சில சமயம் முன்னெச்சரிக்கையாக மருந்து அடிக்கும்போது அதனால் விளைவு (Yield) அதிகரிக்கப்படுவதாக ஆராய்ச்சி மூலம் தெரிய வருகின்றது. அதனால் முன் பாதுகாப்பாக மருந்து அடிப்பதால் நோய் தடுக்கப்படுவதுடன் விளைவும் அதிகரிக்கின்றது. நோய் தாக்காத ரகங்களை உபயோகிப்பதாலும் நோயைத் தடுக்கலாம். நெல்லில் குலைநோய் வராமலிருக்க நோய் தாக்காத நெல் ரகங்களான Co. 25, Co. 29, Co. 30 முதலியவற்றை உபயோகிக்கலாம்.

வாடல் நோய், வேர் அழுகல் நோய் முதலியவற்றின் வித்துக்கள் முக்கியமாக மண்ணிலேயே இருக்கின்றன. இவை மண்ணின் மூலமோ அல்லது தண்ணீர் மூலமோ பரவும். இந்த நோய்களைத் தடுக்கும் விஷயத்திலும் வருமுன் காப்பது மிகவும் நல்லது. நெல்லின் தண்டு அழுகல் நோய் (Stem rot), பருத்தி, துவரை, தக்காளி முதலியவற்றில் ஏற்படும் வாடல் நோய் (Wilt), நிலக்கடலை, பருத்தி முதலியவற்றில் ஏற்படும் வேர் அழுகல் நோய் (Root-rot) முதலியவற்றைச் சில உதாரணங்களாகக் கூறலாம். இந்த நோய் வயல்களில் இங்குமங்குமாகக் காணப்படும். அந்த இடங்களில் உள்ள பயிர்கள் சுழிசுழியாகப் பாதிக்கப்பட்டு வாடிவிடும். இதைக் காணும்பொழுது உடனே வாடிய செடிகளைப் பிடுங்கி எரித்துவிட்டு நன்றாக இருக்கும் மற்ற செடிகளைச் சுற்றிலும் முன் பாதுகாப்பாக மண்ணில் போர்டோ கலவை ஒரு சதம், சிரசான் (Wet ceresan 0·1 per cent)

(21-ம் பக்கம் பார்க்கவும்)

தென்னையில் நோய்கள்

[சி. எஸ். கிருட்டிணமூர்த்தி, பி.எஸ்ஸி. (வேளாண்மை); கா. சிவப்பிரகாசம், பி. எஸ்ஸி. (வேளாண்மை); ச. பத்மனுபன், எம்.எஸ்சி., பூசண இயற் பிரிவு, வேளாண்மை கல்லூரி ஆராய்ச்சி நிலையம், கோவை-3).]

தென்னை நீண்டகாலம் பலன் கொடுக்கக் கூடிய ஒரு எண்ணெய் வித்தாகும். நோய்களின் தாக்குதலால் தென்னையின் மூலம் கிடைக்கும் வருமானம் குறைவது மட்டும் அல்லாது சிலசமயங்களில், தென்னை மரங்களும் அழிந்து விடுகின்றன. ஆதலால் தென்னையைக் காத்து நல்ல பலன் பெற வேண்டுமாயின் பூசண நோய்களைத் தடுக்க முயல வேண்டும்.

(1). குருத்து அழுகல் நோய் (Budrot)

நோயின் அறிகுறிகள் :

தாக்கப்பட்ட மரத்தில் உள்ள குருத்து, மஞ்சள் கலந்த பசுமை நிறத்தை இழந்து பழுப்பு நிறம் பெற்று காய்ந்த தோற்றத்துடன் காட்சி யளிக்கும்.

குருத்து அழுகல்

* முதிராத இலைகளில் புள்ளிகள் தோன்றி அடுத்தடுத்துள்ள இலைகளின் எல்லாப் பாகங்களுக்கும் பரவுகிறது.

* பின்பு உட்பாகமும் பரவி குருத்தையும் தாக்குகிறது.

* தாக்கப்பட்ட குருத்து அழுகி விடுவதால் அதனை மெதுவாக இழுத்தாலும் எளிதில் வந்து விடுகிறது.

* நாளடைவில் மரத்தின் நுனிப்பாகம் முழுதும் அழுகி விடுவதால் அப்பாகம் மரத்திலிருந்து பெயர்ந்து விழுந்து விடுவதும் உண்டு.

தடுப்பு முறை :

மரத்தின் நடுக்குருத்து தாக்கப்படுமுன் நோயின் அறிகுறியைத் தெரிந்து கொண்டால் தாக்கப்பட்ட மட்டை முதலான பாகங்களை மட்டும் நீக்கிவிட்டு மரத்தின் தலைப்பாகம் முழுவதிலும் ஒரு சதவிகித போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும்.

* நடுக்குருத்தும் பாதிக்கப்பட்ட பின்பு மரத்தை உடனே வெட்டி எரித்து விடவேண்டும்.

* அடுத்துள்ள நோய் தாக்கப்படாத மரங்களுக்கும் போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும்.

2. சாறு வடிதல் நோய் (Stem bleeding)

நோயின் அறிகுறிகள் :

* மரத்தில் உள்ள வெடிப்புகளிலிருந்து காவிநிறச்சாறு வடிதல்.

* நாளடைவில் சாறு காய்ந்து கருஞ்சிவப்பு நிறத்தில் மரத்தின்மேல் படிந்திருக்கும்.



சாறு வடிதல்

* தாக்கப்பட்ட பாகம் அழுகி அவ்விடங்களில் குழிகள் தோன்றுகின்றன. அவற்றுள் சாறு தேங்கியிருப்பதையும் காணலாம்.

* இந்நோய் கண்ட மரம் எளிதில் நேரடியாகக் கரய்ந்து விடாவிட்டாலும்கூட மாத்தின் நுனிப்பாகம் சிறுத்து விடுகிறது. காய்ப்பும் குறைந்து விடுகிறது.

தடுப்பு முறை :

* நோயினால் தாக்கப்பட்ட பாகங்களைச் செதுக்கி எடுத்து விட்டு, நெருப்புப் பந்தத்தை அதனுள் காண்பிக்க வேண்டும்.

* வெட்டி எடுத்த பாகங்களை எரித்து விட வேண்டும்.

* நோய் தாக்கிய பாகங்களை வெட்டி எடுப்பதனால் ஏற்படும் குழிகளில் நீர் தேங்காமல் தடுப்பதற்காக மரப் பொடியைத் தாரில் கலந்து அவற்றுள் அடைக்க வேண்டும்.

3. வாடல் நோய் அல்லது தட்டுக் காளான் நோய்

நோயின் அறிகுறிகள் (Ganoderma Wilt)

* முதிர்ந்த இலைகள் பசுமை நிறத்தையிழந்து வெளுத்த மஞ்சள் நிறம் கொண்டவையாகக் கீழ் நோக்கித் தொங்கும்.

* முதிராத இலைகள் சிறிது காலம் பசுமையாகவே இருக்கும்.

* மரங்கள் காய்ப்பினை இழந்து விடுகின்றன.



தென்னை வாடல் நோய் அல்லது தட்டுக்காளான் நோய்

* நோய் தாக்கியபின் உண்டாகும் இலைகள் முழுவளர்ச்சி பெறாமல் மஞ்சள் நிறத்துடன் தோன்றி பின்பு குருத்து அழுகுவதால் அவைகளும் உதிர்ந்து விடுகின்றன.

* சில சமயங்களில் மரத்தின் அடிப்பாகத்தில் வெடிப்பு களிலிருந்து சாறு கசிந்து கொண்டிருக்கும்.

* பிற்காலத்தில் மரங்களில், கடினத் தன்மையுடைய தட்டு போன்ற பூசணத்தினால் ஏற்பட்ட வளர்ச்சியைக் காணலாம்.

தடுப்பு முறை :

* அங்கக் பொருள்கள் (Organic matter) குறைவாக உள்ள இடத்தில் வளரும் மரங்கள் விரைவில் இந்நோய்க்கு ஆளாகின்றன.

* ஆதலால் மரங்களுக்கு இடையில் தழை உரச்செடிகளை வளர்த்து மடக்கி உழுது விடவேண்டும். அல்லது அதிக மான அளவில் தொழு உரம் போட வேண்டும்.

* நோயால் தாக்கப்பட்ட மரங்களை வெட்டி விடுவதுடன் அவற்றின் தூர்களைச் சுற்றிலும் குழி தோண்டி வைக்க வேண்டும்.

* அடுத்துள்ள நோய் தாக்காத மரங்களின் தூர்களைச் சுற்றிலும் கந்தகத் தூளும் சுண்ணாம்பும் கலந்து அரை முதல் ஒரு இராத்தல் வரை ஒவ்வொரு மாதத்திற்கும் போட வேண்டும்.

4. இலைப்புள்ளி நோய் : (Leaf blight)

நோயின் அறிகுறிகள் :



இலைப்புள்ளி

* முதிர்ந்த இலைகளில் மட்டும் தென்படும்.

* ஆரம்பத்தில் சாம்பல் நிறம் சூழப்பட்ட சிறு மஞ்சள் நிறப் புள்ளிகள் இலைகளின் மேல் தோன்றும்.

* பிறகு புள்ளிகளின் நடுப் பாகம் சாம்பல் நிறமாகவும் அவற்றின் சுற்றுப்பாகம் பழுப்பாகவும் மாறுகின்றன.

* நாளடைவில் பலபுள்ளிகள் ஒன்று சேர்ந்து ஒழுங்கற்ற வடிவத்தில் காய்ந்து தோன்றும். அவற்றின் மேல் கருநிறப் புள்ளிகளைக் காணலாம்.

* நோயின் தாக்குதல் அதிகமாகி இருந்தால் இலையின்பெரும் பாகம் சுருங்கி, கருகிய தோற்றத்துடன் காட்சியளிக்கும்.

தடுப்புமுறை :

* தண்ணீர் தேங்கி நிற்காத வண்ணம் வடிகாலினைத் திருத்துவதுடன் சாம்பல் சத்துடைய (Potash) உரங்களைப் போட வேண்டும்.

* காய்ந்த தோகைகளை நீக்கிவிட்டு ஒரு சதவிகித போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும்.

வரகுப்பயிரில் சுடுமல்லி

[க. ராமலிங்கம், பி.எஸ்ஸி. (எஜி.), பயிர்ப்பாதுகாப்பு அலுவலர், மாவட்ட விவசாய அலுவலர் அலுவலகம், கள்ளக்குறிச்சி.]

தென் ஆற்காடு மாவட்டத்தில் 'சுடுமல்லி' (Striga) சோளப் பயிரை அழிப்பதோடு வரகுப் பயிரினும் அதிக அளவு தோன்றி விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. இந்த தொத்துச் செடியை அழிக்க சீரிய நிலப் பண்பாட்டு முறை, சுத்தமான வித்துக்களை யும் எருக்களையும் உபயோகித்தல், மாற்றுப்பயிர் செய்தல், அக்ராக்சோன் மருந்தடித்தல் ஆகிய முறைகளை விவசாயிகள் பின்பற்றவேண்டும்.

சோளம், வரகு, புகையிலை போன்ற பயிர்களையும் மா, இலுப்பைபோன்ற மரங்களையும் சில தொத்துச் செடிகள் பாதிக்கின்றன. சோளம், வரகுப் பயிர்களில் தோன்றும் 'சுடுமல்லி'யைப்பற்றி சற்று விளக்கமாக ஆராய்வோம்.

சுடுமல்லிச் செடி வெளிர் பச்சை நிறமாக இருக்கும். 6" லிருந்து 15" உயரம் வளரும். இதன் இலைகள் தும்பை இலைகளைப்போன்று, ஆனல் அதைவிட மிகச் சிறியதாக இருக்கும். இதன் தண்டு எளிதில் முறிந்துவிடக் கூடியது. செடியின் மேற்புறம் சுரசுரப்பாக இருக்கும். இதன் பூக்கள் மல்லிகைப் பூப்போன்று வெண்ணிறமாகவும், சிறியதாகவும் இருக்கும். இதன் பூக்கள் மல்லிகைப் பூப் போன்று வெண்ணிறமாக இருப்பதாலும் இச்செடி தாக்கிய வரகுப் பயிர் நெருப்பால் சுட்டதுபோல் பட்டு கருகி விடுவதாலும் இதைச் 'சுடுமல்லி' என்கிறார்கள். இச்செடியின் இலைகளும், தண்டும் கசப்புத் தன்மை உடையவை. இச்செடி வரகு வைக் கோலுடன் கலந்துவிட்டால் மாடு வைக்கோலைத் தின்பதில்லை. அன்றியும் இச்செடி நஷ்டத்தைக் கொடுக்கக்கூடியதால் விவசாயிகளால் வெறுத்து ஒதுக்கப்படுகிறது. எனவே இச்செடி 'கசப்பு' என்றும் வழங்கப்படுகிறது. சில பகுதியிலுள்ள விவசாயிகள் இதைப் "பல்" என்றும் அழைக்கிறார்கள்.



வரகு வேரில் சுடுமல்லி.

இப்பூண்டு சோளப்பயிரில் அதிக அளவில் காணப்படுகிறது. தென் ஆற்காடு மாவட்டத்தில் சோளப்பயிரை அழிப்பதோடு நிற்காமல் அதிக அளவு பயிராகும் வரகுப் பயிரிலும் முளைத்து விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. இப்பூண்டு வரகுப் பயிரின் அருகில் முளைக்கிறது. முளைத்து வந்ததும் தன்னுடைய வேர்களை வரகுப் பயிரின் வேர்களிடையே பின்னிக்கொண்டு வரகுப் பயிரின் வேருக்குள் தன் வேரை செலுத்துகிறது. வரகுப் பயிரின் வேரிலிருந்து திரவரூபத்திலிருக்கும் உணவுச் சத்தை தன் வேர் மூலம் உறிஞ்சிக் கொள்கிறது. இதற்கு ஏற்றவாறு சுடுமல்லியின் வேர்கள் அமைந்திருக்கின்றன. இதனால் வரகுப்பயிர் நாளடைவில் வலிமை குன்றி காய்ந்துவிடுகிறது.

இப்பூண்டால் பாதிக்கப்பட்ட பயிரிலிருந்து கிடைக்கக் கூடிய வருவாய் மிகவும் குறைவு. சாதாரணமாக ஒரு ஏக்கரிலிருந்து—,000–லிருந்து 1,200 ராத்தல் வரகு கிடைக்கும். இதன் மதிப்பு சுமார் ரூ. 120 ஆகும். சுடுமல்லியால் பாதிக்கப்பட்ட வரகுப் பயிரிலிருந்து 300 ராத்தல் வரகுகூட கிடைப்பது கடினம். இதன் மதிப்பு ரூ. 30 சில சமயங்களில் உழவுச் செலவுக்கும் விதைச் செலவுக்கும் கூட வரகு கிடைப்பதில்லை. வரகு வைக்கோலில் இச்செடி கலந்துவிட்டால் மாடு இவ்வைக் கோலை விரும்பித் தின்பதில்லை. கலவை உரம் தயார் செய்யவும் இவ்வைக்கோலைப் பயன்படுத்துவதற்கில்லை. எனவே ரூ. 10 பெறுமான வைக்கோலும் வீணாகிறது.

இப்பூண்டின் விதை கீழ்க்கண்ட நான்கு விதங்களில் பரவுகிறது:—

1. முளைத்த நிலத்திலேயே விழுந்து பரவுதல்.

வரகுப் பயிரின் கதிர் முற்றி அறுவடைக்குத் தயாராவதற்குள் இப்பூண்டு பூத்துக் காய்த்துவிடுகின்றது. முற்றிய விதைகள் நிலத்தில் விழுந்துவிடுகிறது. அவ்விதை மழை பெய்ததும் ஆடி, ஆவணியில் முளைத்துவிடுகிறது.

2. இவ்விதை கலந்துள்ள வரகு விதையை உபயோகிப்பதால் பரவுதல்.

அறுவடையின்போது வரகுப் பயிருடன் இச்செடிகளும் கலந்து விடுகிறது. வரகுப் பயிரிலிருந்து தானியத்தைப் பிரித்தெடுக்கும்போது வரகு விதையுடன் இவ்விதையும் கலந்துவிடுகிறது. இந்தப் பூண்டின் விதைகள் சிறியதாகவும் நிறத்தில் ஏறக்குறைய வரகு விதையை ஒத்திருப்பதாலும் வரகு விதையிலிருந்து இவ்விதைகளைப் பிரித்தெடுப்பது கடினம். இவ்விதை கலந்த வரகு விதையை விதைத்தால் அந்த நிலத்திலும் இப்பூண்டு முளைக்கிறது.

3. இவ்விதை கலந்துள்ள தொழு உரத்தால் பரவுதல்.

அறுவடை செய்த வரகுத்தாளை மாடுகளுக்குத் தீவன மாக உபயோகப்படுத்துவதால் அவ்வரகுத்தாளில் கலந்துள்ள விதை சாணத்துடன் வெளிவருகிறது. அச் சாணத்தைத் தொழு உரமாக்கிப் பயன்படுத்துவதனுல் விதை பரவுகிறது.

4. இவ்விதை கலந்துள்ள கம்போஸ்ட் உரத்தை உபயோகிப்பதால் பரவுதல்.

இவ்விதை கலந்துள்ள வரகுத்தாளை உபயோகித்துத் தயார் செய்யப்பட்ட கம்போஸ்ட் உரத்தை உபயோகிப்ப தால் பரவுகிறது.

தடுப்புமுறை.

(அ) நிலப்பண்பாட்டு முறை.—இப்பூண்டு முளைக்கும் வயலை மழை பெய்தவுடன் ஒரு சால் ஓட்டி சிறிது சோளத்தை விதைத்து வைத்தால் இப்பூண்டு முளைக்கும். மறுபடியும் ஓட்டினுல் முளைத்த பூண்டும் சோளமும் அழிந்துவிடும். பிறகு வேண்டிய பயிர் செய்யலாம்.

(ஆ) விதை பரவாமல் தடுத்தல்:—இந்த விதைக் கலப்பில்லாத சுத்தமான வரகு விதை, தொழு உரம், கம்போஸ்ட் முதலியவை் உபயோகிக்கவேண்டும்.

(இ) மாற்றுப்பயிர் செய்தல்.—இப்பூண்டு சோளம், வரகு போன்ற பயிர்களை மட்டுமே தாக்குவதால் இதனுல் பாதிக்கப்படாத மணிலா, கொள், எள் போன்ற பயிர் களைப் பயிரிடவேண்டும். இச்செடி இப்பயிர்களுடன் முளைத்த போதிலும் இதற்கு வேண்டிய உணவை மணிலா, எள், கொள் போன்ற செடிகளின் வேரிலிருந்து எடுத்துக்கொள்ள முடியாது. எனவே உடனே காய்ந்து விடும்.

(ஈ) இரசாயன முறை.— ஐந்து சதவிகிதம் அக்ராக் சோன் (Agroxone) என்ற மருந்தை ஒரு ஏக்கருக்கு 35 ராத்தல் தூவுவதன் மூலம் தடுக்கலாம். எனினும் சிறந்த பலனுக்கு மேலே கூறப்பட்டுள்ள மூன்று முறை களையும் அவசியம் அனுசரிக்கவேண்டும்.

சோளப் பயிரை இப்பூண்டிலிருந்து காப்பாற்றுவதற் கும் மேற்கூறிய முறைகளையே பின்பற்றவேண்டும். சூடு மல்லியால் பாதிக்கப்படாத கோ. 20 என்ற பெரிய மஞ் சள் சோள ரகத்தையே இப்பூண்டு காணப்படும் நிலங்களில் விதைக்கவும்.

[17-ம் பக்கம்—தொடர்ச்சி]

முதலிய ஏதாவது ஒரு மருந்தை ஊற்றி நனைக்க வேண்டும். அப்படிச் செய்தால் நோய் ஒரு இடத்திலிருந்து மற்ற இடத்துக்குப் பரவாது. அப்படிப் பரவினுலும் நன்ருக இருக்கும் செடியைச் சுற்றிலும் நாம் மருந்தால் நனைத் திருப்பதால் அவைகள் தாக்கப்படமாட்டாது. மேலும் நோயின் வித்துக்கள் தண்ணீர் மூலம் பரப்பப்படுமாதலால் நோய் வந்த நிலத்திலிருந்து தண்ணீரை நோய் இல்லாத நிலத்திற்குப் பாய்ச்சக்கூடாது. அதனுல் இந்த வகையான நோய்களைத் தடுக்கும் விஷயத்திலும் வருமுன் காப்பது லாபகரமானதாக இருக்கும்.

நெல்லின் தூர் அழுகல் நோய் (Foot-rot of Paddy), சோளத்தின் கரிப்பூட்டை நோய் (Short and loose smut), பருத்தியின் கருங்கிளை நோய் (Black arm), முதலியன விதையின் மூலம் பரவுகின்றன. நோயின் வித்துக்கள் விதையின்மேல் ஒட்டிக் கொண்டிருக்கும். விதைகளை அக்ரசான், சிரசான், கந்தகம் முதலிய ஏதாவது ஒரு மருந்தை ஒரு பவுண்டு விதைக்கு ஒரு கிராம் மருந்து வீதம் கலந்து முன் தடுப்பு முறையாக அந்த நோயின் வித்துக்களை அழித்துவிட்டு விதைகளை உபயோகிக்கா விட்டால், நோய் பின்பு ஏற்பட்டு அந்த நிலையில் பயிர்களைப் பிடுங்கி அழித்து விடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்டு நஷ்டம் உண்டாகின்றது. அதனுல் இந்த நோய்களையும் வருமுன் காப்பதற்காக நிச்சயமாக விதையுடன் மருந்து கலக்கி விதைத்தால்தான் தடுக்கமுடியும்.

தாவரங்களுக்கு ஏற்படும் 'வைரஸ் நோய்கள்' (Virus disease) முக்கியமாகப் பூச்சிகளால் ஒரு தாவரத்தி லிருந்து மற்றதற்குப் பரப்பப்படுகின்றன. வெண்டையின் நரம்பு வெளுத்தல் நோய் (Vein clearing in Bhendi), கத்தரியின் சிறு இலை நோய் (Little leaf of Brinjal), கரும்பின் 'தேமல் நோய்' (Sugarcane mosaic) முதலிய சிலவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அடிக்கடி முன்னெச்சரிக்கையாகப் பூச்சி மருந்துகளை உபயோகித்து வந்தோமானுல் பூச்சிகள் இத்தாவரங்களுக்கு வருவது தடுக்கப்படுவது மட்டுமல்லாமல் வைரஸ் நோய் பரவுவதும் குறையும் என்பது தெளிவு.

மேற்கூறியவற்றிலிருந்து தாவர நோய்களைத் தடுப்பதில் வருமுன் காப்பதின் அவசியம் நன்கு விளங்கும். அதனுல் விவசாயிகள் பயிர்களுக்கு எந்தக் காலத்தில், எப்படி எந்த நோய் வரக்கூடும் என்பதை அனுபவத் திலோ அல்லது அருகிலுள்ள விவசாய விளக்குனரையோ கேட்டுத் தெரிந்துகொண்டு முன்னெச்சரிக்கையாகத் தடுப்பு முறைகளைக் கையாண்டால், தங்கள் பயிர்களை நோய்களிலிருந்து காப்பாற்றி லாபம் அடைவதுடன் நாட்டிற்கும் நலன் செய்தவர்களாக ஆவார்கள்.

சென்னை ராஜ்யத்தில் விவசாய வர்த்தகம்

கே. ஸ்ரீராமன், பி.எஸ்ஸி· (ஏஜி.), எம்.எஸ்ஸி., மாநில வர்த்தக அலுவலர், சென்னை,

இரண்டாம் பாகம்

இணைப்பு 1

தமிழ்நாட்டிலுள்ள அரசினர் ஒழுங்கு முறை விற்பனைச் சந்தைகள்.

வட ஆற்காடு ஒழுங்குமுறை விற்பனைக் கமிட்,டி வேலூர்

	இடங்களின் பெயர்கள். (1)	சென்னை விளைபொருள் விற்பனைச் சட்டத்தின்மேல் குறிக்கப்பட்ட பொருள்கள். (2)
1.	வேலூர்	நிலக்கடலை எல்லா சந்தைகளிலும்—கரும்பு வெல்லம் அண்மையில் சேர்க்கப்பட்டுள்ளன. நெல்லும், மிளகாயும் சேர்ப்பது பற்றி ஆலோசனையில் இருந்து வருகிறது.
2.	திருவண்ணாமலை	
3.	ஆரணி	
4.	ஆர்க்காடு	
5.	வந்தவாசி	
6.	திருப்பத்தூர்	
7.	குடியாத்தம்	
8.	அரக்கோணம்	
9.	சேத்துப்பட்டு	
10.	செய்யாறு	
11.	செங்கம்	
12.	வாணியம்பாடி	

தென்னாற்காடு ஒழுங்குமுறை விற்பனைக் கமிட்டி, கடலூர்.

1.	கடலூர்	நிலக்கடலை, எள், நெல் பருத்தி எல்லா சந்தைகளிலும்.
2.	வளவனூர்	
3.	விழுப்புரம்	
4.	விருதாசலம்	
5.	கள்ளக்குறிச்சி	
6.	திருக்கோயிலூர்	
7.	சின்ன சேலம்	
8.	உளுந்தூர்பேட்டை	
9.	பண்ருட்டி	
10.	சிதம்பரம்	
11.	செஞ்சி	
12.	திண்டிவனம்	
13.	காட்டு மன்னார் கோயில்	
14.	செந்தியாதோப்பு	
15.	பெண்ணாடம்	

கோயம்புத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கமிட்டி, திருப்பூர்.

1.	திருப்பூர்	பருத்தி, புகையிலை, மணிலா.
2.	கோயம்புத்தூர்	
3.	ஈரோடு	
4.	கோபிசெட்டிபாளையம்	
5.	பல்லடம்	
6.	தாராபுரம்	
7.	பொள்ளாச்சி	
8.	பெருந்துறை	
9.	உடுமலைப்பேட்டை	
10.	அன்னூர்	

இராமநாதபுரம் ஒழுங்குமுறை விற்பனைக் கமிட்டி, விருதுநகர்.

1	விருதுநகர்	பருத்தி, மணிலா, மிளகாய்.
2.	இராஜபாளையம்	
3.	சாத்தூர்	
4.	அருப்புக்கோட்டை	
5.	சிங்கம்புணரி	
6.	இராமநாதபுரம்	

திருநெல்வேலி ஒழுங்குமுறை விற்பனைக் கமிட்டி, கோவில்பட்டி.

1.	கோவில்பட்டி	பருத்தி, மிளகாய்.
2.	சங்கரன்கோவில்	
3.	தூத்துக்குடி	
4.	புதூர்	
5.	கடம்பூர்	

தஞ்சாவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கமிட்டி.

	இடங்களின் பெயர்கள். (1)	சென்னை விளைபொருள் விற்பனைச் சட்டத்தின்கீழ் குறிக்கப்பட்ட பொருள்கள். (2)
1.	சீர்காழி	நெல், மணிலா.
2.	தஞ்சாவூர்	
3.	பட்டுக்கோட்டை	
4.	முத்துப்பேட்டை	
5.	அதிராம்பட்டணம்	
6.	குற்றாலம்	
7.	மன்னார்குடி	
8.	கும்பகோணம்	நெல்.
9.	திருவாரூர்	
10.	பாபநாசம்	

திருச்சிராப்பள்ளி ஒழுங்குமுறை விற்பனைக் கமிட்டி, திருச்சி.

1.	கரூர்	முந்திரி, எள், மணிலா, மிளகாய்.
2.	குலங்குடி	
3.	அரியலூர்	
4.	ஜயங்கொண்டான்	
5.	மணப்பாரை	மணிலா, எள், நெல், மிளகாய்.
6.	ஆண்டிமடம்	
7.	செந்துரை	எள், மிளகாய், மணிலா, .. நெல்.
8.	துறையூர்	.. மிளகாய், மணிலா, நெல்.

ஸ்தாபிதம் : 1885

தந்தி : நர்சரி போன் : 3210

79 வருடங்களாக சேவை செய்து வரும்
கான் சாஹிப் S. K. I. ஹாஜீ
அப்துல் ரஹிமான் சாஹிப்
ஸ்தாபனம்.

சேலம் நர்சரி கார்டன்ஸ்,
சேலம்.

புகழ்பெற்ற ஒட்டு மாஞ்செடிகள், எலுமிச்சை, தென்னை, இதர பழச் செடிகள், அலங்காரச் செடிகள், காய்கறி, புஷ்ப விதைகளுக்குச் சிறந்த இடம்.

Proprietor :
S. K. A. அப்துல் ரஜாக் சாயுபு,
சேலம் நர்சரி கார்டனஸ்,
செரி ரோடு, சேலம்-7.
(S. India.)

இணைப்பு 2

" அக்மார்க்'' தரப் பாகுபாட்டின்கீழ் அடைந்த முன்னேற்றம்.

	எடையளவு குவிண்டாலில்.							
ஆண்டு	அரிசி	நெய்	நல்ல எண்ணெய்	கடலை எண்ணெய்	உருளைக் கிழங்கு	வெல்லம்	கோழி முட்டை	சாத்துக்குடி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1957–58	17,300	3,400	2,598	590	3,048	இல்லை.	18,62,207	இல்லை.
	(17வி)	(17வி)	(7வி)	(1வி)	(6வி)		(9வி)	(2வி)
1958–59	17,000	4,500	3,495	1,683	2,275	இல்லை.	16,44,404	இல்லை.
	(24வி)	(21வி)	(8வி)	(1வி)	(9வி)		(16வி)	(2வி)
1959–60	21,000	6,000	1,615	1,190	1,383	இல்லை.	28,51,427	இல்லை.
	(58வி)	(35வி)	(8வி)	(1வி)	(14வி)	(21வி)	(16வி)	(2வி)
1960–61	33,486	9,206	1,966	1,055	952	132	16,40,201	14,829
	(111வி)	(55வி)	(48வி)	(10வி)	(45வி)	(51வி)	(41வி)	(61வி)
1961–62	78,834	17,239	2,619	1,982	4,056	3,807	17,98,573	4,40,197
	(171வி)	(57வி)	(31வி)	(20வி)	(47வி)	(39வி)	(45வி)	(52வி)
1962–63	1,59,773	10,160	5,005	1,706	7,508	14,800	15,42,710	5,70,924
	(146வி)	(50வி)	(29வி)	(16வி)	(40வி)	(34வி)	(39வி)	(42வி)
1963–64	1,25,970	13,095	10,902	1,904	3,308	3,940	17,95,196	1,96.556
	(142வி)	(55வி)	(23வி)	(4வி)	(40வி)	(15வி)	(51வி)	(21வி)
1963–64-க்கு மதிப்பு இலட்ச ரூபாயில்.	92.33	87.87	23.65	4.16	1.63	3.00	2.98	0.29

வி=வியாபாரி (Packer).

தந்தையைப்போல் தனயன்...

ஆம், சில விஷயங்களில்தான்...முக்கியமான சிலவற்றிலோ? ஊஹூம்! ராமன் தன் தந்தையைப்போல் ஒரு விவசாயியாகத்தான் இருப்பான். ஆனால் அவன் நிலத்தை உழுது பயிரிடும் விதமே வேறுதான். தரத்திலுயர்ந்த விதைகளையே விதைப்பான். விஞ்ஞான ரீதியில் மாற்றி மாற்றிப் பயிரிடுவான். நீர்ப்பாசன வசதிகளை நன்கு பயன்படுத்துவான். ராலீஸ் தயாரிப்பதுபோன்ற சமநிலை உரக்கலவைகளைக்கொண்டு தனது நிலங்களை வளப்படுத்துவான். ராலீஸ் தயாரிக்கும் ''மரம் மார்க்'' உரங்கள் இந்திய விவசாயிகளுக்குத் தரமான, வளமான விளைச்சலை அளிக்கின்றன. ராலீஸ் உரங்களில் முதலீடு செய்யப்படும் 1 ரூபாய், 4 ரூபாய் அதிகப்படி விளைச்சலைத் தருகிறது.

RALLIS TREE BRAND FERTILISERS

ராலீஸ் இந்தியா லிட்.

இந்தியா முழுவதும்

விவசாயச் செய்திக் கதிர்

கே. எம். சுந்தரம், டி. ஈகோத்தமராவ், விரிவினைப் பிரிவு, கோவை.

டி. என். ஆர். 1 (TNR. 1) திருத்துறைப்பூண்டி கார் புதிய நீரடி நெல் ரகம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நீர்த்தேக்கமுள்ள நிலங்களில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற டி.என்.ஆர். 1 என்ற ஒரு புதிய நெல் ரகம் இப்போது வெளியிடப்பட்டுள்ளது.

* இது தற்போது சாகுபடியிலிருக்கும் நாட்டு ரகமான திருத்துறைப்பூண்டி கார் ரகத்தைவிட 16 சதவீதம் வரை அதிகமான மகசூல் கொடுக்கிறது. எக்கருக்கு சராசரி 1,020 கிலோ தானியம் கிடைக்கிறது.

* திருத்துறைப்பூண்டி தாலுகாவில் தலைஞாயர், முத்துப்பேட்டை பிர்க்காக்களில் பெரும்பாலும் சாகுபடி செய்யப்படும் திருத்துறைப்பூண்டி கார் இனத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டது. இந்த ரகம் சம்பா பருவத்தில் சாகுபடி செய்வதற்குகந்தது.

* இதன் வயது 140 நாட்கள்.

* இதன் அரிசி சிவப்பு. 100 ராத்தல் நெல்லிலிருந்து 74·8 ராத்தல் அரிசி வரை கிடைக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் சுமார் 30,000 எக்கர் நீர்த்தேக்க நிலங்கள் உள்ளன· விவசாயிகளே! சிறந்த பலனுக்கு இந்நிலங்களில் டி.என்.ஆர். 1 என்ற புதிய நீரடி நெல் ரகத்தையே பயிர் செய்யுங்கள்.

சோளக் குருத்துப் பூச்சியைக் கட்டுப்படுத்துதல்.

கோடைப் பாசனச் சோளப் பயிரைத் தாக்கும் குருத்துப் பூச்சியைக் கட்டுப்படுத்த பி.எச்.சி. 0·05 சதவீதம், என்டிரின் 0·02 சதவீதம் அல்லது டையல்டிரின் 0.1 சதவீதம் மருந்தை உபயோகியுங்கள். இதனால் 11–18 சதவீதம் வரை கூடுதலான மகசூல் கிடைக்கிறது. கோவில்பட்டி பிராந்திய ஆராய்ச்சி நிலையத்தில் இது சம்பந்தமான பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இப்பரிசோதனைகளில் மேற்கூறிய பூச்சி மருந்துகள், பயிரின் 4-வது வாரம் துவங்கி 10 நாட்களுக்கொரு முறையாக மூன்று முறை தெளிக்கப்பட்டன. இவற்றில் பி.எச்.சி. மருந்து தெளிக்கப்பட்ட பாத்திகளில் பயிரின் மகசூல் அதிகமாகவும், என்டிரின், டையல்டிரின் தெளிக்கப்பட்ட பாத்திகளில் மகசூல் அதைவிட சற்றே குறைவாகவும் கிடைத்தது. மருந்தேதும் அடிக்காத பாத்திகளில் மகசூல் மற்றவைகளைவிடக் குறைவாகவே இருந்தது. மேற்கூறிய மருந்துகள் அடித்த பாத்திகளிலிருந்து 11–18 சதவீதம் வரை கூடுதலாக மகசூல் கிடைத்தது.

சோள இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த....

உங்கள் சோளப் பயிர் இலைப்புள்ளி நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் மாதத்திற்கொருமுறை எக்கருக்கு 20 ராத்தல் கந்தகத் தூளைத் தூவி இலாபகரமான முறையில் அந்நோயைக் கட்டுப்படுத்துங்கள். இது சம்பந்தமாக நடந்த பரிசோதனைகளில் கந்தகம் தூவியதால்—

* இலைப்புள்ளி நோயின் தீவிரம் குறைந்தது.

* எக்கருக்கு சுமார் 72 ரூபாய் அதிகப்படியாகக் கிடைத்தது. மூன்று முறை கந்தகத்தூள் அடிக்க மருந்து உள்பட எக்கருக்கு சுமார் 14 ரூபாய் செலவாயிற்று. ஆகவே எக்கருக்கு சுமார் 58 ரூபாய் நிகர லாபம் கிடைத்தது.

* இலைப்புள்ளி நோய் கட்டுப்படுவதோடு செடிகளைத் தாக்கும் உண்ணிகளின் தாக்குதலும் தடுக்கப்பட்டது.

'கோகோ' பயிரைத் தாக்கும் பூச்சிகள்.

இப்பயிரைத் தாக்கும் பூச்சிகளில் முக்கியமானது கோகோ நாவாய் பூச்சியாகும். இது செடியின் இளந் தண்டு பாகங்களைத் துளைப்பதனால், துளைக்கப்பட்ட நீர் தோய்ந்த புள்ளிகள் தோன்றுகின்றன. இத்தகைய புள்ளிகள் பல ஒன்று சேர்ந்து தண்டின் முனை கருகி உலர்ந்து விடுகிறது. கோகோ காய்களும் தாக்கப்பட்டு, தாக்கப்பட்ட காய்களின் பரப்பில் கருமை நிறப்புள்ளிகள் தோன்றுகின்றன. தாக்குதல் தீவிரமடைந்தால் கருமை நிறப் புள்ளிகள் ஒன்று சேர்ந்து காயின் மேற்புரம் இறுகுகிறது. நாளடைவில் இப்பாகத்தில் காய் மேலாக பிளக்க ஆரம்பிக்கும்.

இப்பூச்சி சம்பந்தமாக கொடைக்கானலிலுள்ள உதவி பூச்சி வல்லுநரால் நீலகிரி மாவட்டத்தில் கல்லாரிலும், கன்யாகுமரி மாவட்டத்தில் காமதேனு எஸ்டேட்டிலும் இது சம்பந்தமான பரிசோதனைகளில் கோகோ பயிரின் இளந் தண்டுப் பாகங்களும், காய்கள் அனைத்தும் இப்பூச்சியின் தாக்குதலுக்குட்பட்டன. நிழல் அதிகமாகப்படும் மரங்களில் இப்பூச்சிகள் அதிகமாகக் காணப்பட்டன. இப்பூச்சியை மாலதியான் 0·1 சதவீதம் அல்லது லின்டேன் 0·05 சதவீதம் மருந்து தெளிப்பதன்மூலம் திருப்திகரமாகக் கட்டுப்படுத்தலாம்.

கோகோ பேன் இளந்தண்டுப் பாகங்களிலும் காய்களிலும் கூட்டமாக மொய்க்கின்றன. இப்பூச்சிகளோடு சிவப்பெறும்புகளும் சேர்ந்து காணப்படுகின்றன. இப் பூச்சியையும் தண்டு, மலர்கள் ஆகியவற்றைத் தாக்கும் அசுவுனிப் பூச்சியையும், மாலதியான் 0·1 சதவீதம் அல்லது பாரதியான் 0·025 சதவீதம் மருந்தைத் தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

கோகோ மரத்தை ஒருவகைப் பூனை, காய் பழுக்கும் பருவத்தில் தாக்கி பழங்களைக் கடித்து உள்ளிருக்கும் விதைகளைத் தின்று நாசம் செய்கிறது. இப்பிராணியை இரவு நேரங்களில் துப்பாக்கியால் சுடுவதன்மூலம்தான் கட்டுப்படுத்தலாம்.

(28-ம் பக்கம் பார்க்கவும்)

இரண்டு திறமை மிக்க கருவிகள்

பண்ணை வேலைகளில் மேலும் சிறந்த சிக்கனத்திற்கும், அதிகமான விளைச்சல்களுக்கும்

டிராக்டரில் பொருத்தப்பட்ட வட்டமான ஆப்ஸெட் (OFFSET) பரம்புச் சட்டங்கள்

டிராக்டரில் பொருத்தப்பட்ட வட்டமான ஆப்ஸெட் பரம்புச் சட்டங்கள் செப்பனிடப்படாத கரடுமுரடான பாதைகளிலும், பழத்தோட்டங்களிலும் திறந்த வெளி நிலங்களிலும் திறமைமிக்க சேவை அளிப்பதற்கென அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை சிறந்த முறையில் புல்பூண்டுகளை வெட்டி, மண்கட்டிகளை உடைத்து, மண்ணைப் பொடியாக்கி, அதில் காற்றுப் புகும்படியாகச் செய்கின்றன. இவற்றின் தனிப்பட்ட தன்மைகளைப் பாருங்கள்.

1. எல்லாவிதமான பிரமாண்டமான முப்பொருத்த இணைப்புகளிலும் பொருந்தும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறது. (அது எந்த உருளும் டிராக்டரானாலும் சரி)
2. வளைவுகளில் வெல்டு செய்யப்பட்ட வலுவான எஃகுச் சட்டம்.
3. இறக்குமதி செய்யப்பட்ட, உஷ்ணத்தில் பதனிடப்பட்ட வட்டத்தகடுகள்.
4. நிச்சயமாக ஆழமாக ஊடுருவிச்செல்லும் தன்மை.
5. கரடுமுரடான பூமியில் வளைந்துகொடுப்பதற்கேற்ப இணங்கிவரும் ஸ்ப்ரிங் பொருத்தப்பட்ட மேல் இணைப்பு.

மேலும், 14 முதல் 50 ஹார்ஸ் பவர் கொண்ட எந்த டிராக்டருடனும் பொருந்தும் இணைப்பு வகைகளும் கிடைக்கும்.



டிராக்டர்களில் பொருத்தப்பட்ட, நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரங்கள் (கல்டிவேடர்ஸ்)

டிராக்டர்களில் பொருத்தப்பட்ட, நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரங்கள், இந்தியாவில் பரந்த அளவில் மாறுபட்ட மண்ணின் தன்மைகளுக்கேற்றபடி அமைக்கப்பட்டிருக்கின்றன. லேசான மண்முதல் அடர்த்தியான மண்கள்வரை எல்லா மண்களிலும் உழுவதற்கான பற்பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் வெவ்வேறு மாடல்களில் கிடைக்கும். நீரியல் விசையும் (ஹைட்ராலிக் லிப்டு), முப்பொருத்த இணைப்பும் கொண்ட, 14 முதல் 50 ஹார்ஸ் பவர் கொண்ட உருளும் டிராக்டர்களுக்கேற்ற வெவ்வேறு அளவுகளில் கிடைக்கும்.

முழு விவரங்களுக்கு எழுதுங்கள்:

VOLTAS

வால்டாஸ் லிமிடட்

எர்த் மூவிங், மைனிங், அண்டு அக்ரிகல்சரல் டிவிஷன்.
டாக்டர் அம்பேட்கர் ரோடு, சின்ச்போக்லி, பம்பாய்-33

கல்கத்தா . மதராஸ் . புதுடில்லி . பங்களூர்
கொச்சின் . அஹமதாபாத் . ஸெகந்திராபாத்
பாட்னா . நாக்பூர் . போபால்.

VOL. 618 A TAM EVEREST

வெற்றிப் பாதை

[கே. எஸ். ஆலம்கிர், பி.எஸ்.ஸி. (ஏஜி.), வேளாண் கல்லூரி, கோவை.]

காட்சி 15

இடம்.—செட்டியார் வீடு.

பாத்திரங்கள்.—செட்டியார், ஏகாம்பரம், குஞ்சிதம்.

[செட்டியார் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஓட்டை விசிறி ஒன்றை முகத்திற்கு நேராகப் பிரித்துக் கொண்டு பக்கவாட்டில் தலையை அசைத்துக் கொண்டிருக்கிறார். ஏகாம்பரம் நுழைதல்.]

ஏகாம்பரம்.—(செட்டியாரை உற்றுப்பார்த்துவிட்டு) என்ன செட்டியாரைய்யா, தலைமட்டும் தனியா ஆடுது..

செட்டியார்.—ஓ! வாத்தியாரா! ஒண்ணுமில்லே வாத்தியாரே, விசிறி ஒண்ணு ப..த்..து பைசா விக்குது. விசிறியும் சீக்கிரம் ஒடியப்படாது. காத்தும் வரணும். அதனாலே விசிறியைப் பிடிச்சுகிட்டு தலையை மட்டும் அசச்சு காத்து வாங்கிறேன்.

ஏகாம்.—நல்ல யோசனைதான்.

செட்டி.—என்ன நம்ம பொண்ணு நல்லாப் பாட்டு படிக்குதா?

ஏகாம்.—(சிரித்துக்கொண்டு) பாட்டு படிக்கல்லே பாட்டு பாடுது ..பாடுது..குஞ்சிதம் பாடி, நீங்க கேட்டதில்லையே.

செட்டி.—அதை சாவகாசமா ஒரு நாளைக்கி வச்சுக்கிருவோம் (குஞ்சிதம் வருகிறாள்). என்னம்மா குஞ்சிதம் வாத்தியார் கிட்டே நல்லாப் படிச்சுக்கோ. மாசம் மூணு ரூபாய் சம்பளம் கொடுக்கிறோம் பாரு..

குஞ்சிதம்.—சரிப்பா.

செட்டி.—சரி. நீங்க ஆரம்பிங்க, நான் இப்போ வந்துடறேன் (போகிறார்).

ஏகாம்.—என்ன குஞ்சிதம் செட்டியாரு பாட்டைப் பத்திக் கேட்கிறாரே தவிர என்னடா ஒருத்தன் தொண்டைத் தண்ணி வத்தி தினமும் கத்தறானே அவன் சம்பளத்தைக் கொடுப்போமே அப்படீன்னு மனுஷனுக்காத் தெரியவேணும் இல்லே நீயாவது சொல்ல வேணுமா....?

குஞ்சி.—என்னத்தை சொல்றது சார்?

ஏகாம்.—அது போச்சுபோ..பாட்டு வாத்தியாரு சம்பளம் கேக்குறாரு குடுப்பான்னு கேக்குறது.

குஞ்சி.—கேட்டேன் சார்.

ஏகாம்.—(ஆவலோடு) கேட்டியா..உங்க அப்பா என்ன சொன்னாரு?

குஞ்சி.—நீங்க ஏதோ கைமாத்தா காசு வாங்குனீங்களா.. அதுக்கு மாசா மாசம் வட்டிக்கே சம்பளப் பணம் சரியாப் போகுதுன்னு சொல்லிப் போட்டாரு..

ஏகாம்.—(வருத்தத்தோடு) அப்படியா சங்கதி, சரி உட்காரு. [குஞ்சிதம் ஹார்மோனியப் பெட்டியைக் கொண்டு வந்து ஏகாம்பரத்திற்கு முன்னால் வைத்துவிட்டு உட்காருகிறாள்]

ஏகாம்.—(சுருதி கூட்டுகிறாள்) ம்..ம்..ம்..ஸ..ப..ஸ..

குஞ்சி.—(கோரமான குரலில்) ஸ..ப..ஸ

ஏகாம்.—எங்கே இன்னொருதரம்

குஞ்சி.—ஸ..ப..ஸ (மிகவும் கோரமாக)

ஏகாம்.—நேத்து பாடுனீயே பாட்டு அதுலே கொஞ்சம் மிச்சமிருக்கு அதை இன்னிக்கிச் சொல்லித்தர்ரேன்.. (பாடுகிறான்) பாவியினும் படுபாவி....
(பாடுகிறாள்) பாவியினும் படுபாவி....

ஏகாம்.—(சற்று பலமாக) பாவியினும் படுபாவி....

குஞ்சி.—(உரக்கக் கத்துகிறாள்) பாவியினும் படுபாவி....

ஏகாம்.—என்ன சரியாப் பாட மாட்டேங்கிறே

குஞ்சி.—தொண்டை கட்டியிருக்கு சார்..

ஏகாம்.—அப்போ நான் எப்படி சொல்லிக் கொடுக்கிறது.

குஞ்சி.—(கெஞ்சுகிறாள்) சார் இன்னிக்கு டியூஷன் போதும் சார்.

ஏகாம்.—(அதிர்ச்சியுற்று) ஐயையோ! ஒரு மணிநேரம் உனக்கு பாட்டு சொல்லிக் கொடுக்கல்லேன்னா உங்க அப்பா ஒரு ரூபாயை கதக்குன்னு வெட்டிபோடுவாரே.

குஞ்சி.—அப்போ ஏதாவது பேசுங்க சார்.

ஏகாம்—(சலிப்போடு) உங்கிட்டே என்னத்தைப் பேசுறது.

குஞ்சு.—வந்து..பாவி..பாவின்னு பாடுனீங்களே சார் அப்படீன்னா என்ன சார்..

ஏகாம்.—(அசட்டுச் சிரிப்புடன்) பாவின்னா பாவிதான்..

குஞ்சு.—புரியல்லேங்களே....

ஏகாம்.—உனக்கெங்கே புரியப்போகுது சுருக்கமாச் சொன்னா உங்கப்பன் ஒரு பாவி..

குஞ்சு.—என்ன சார் அப்படிச் சொல்றீங்க எங்கப்பா நல்லவர் சார்..

ஏகாம்.—நீ நெனச்சுகிட்டிருக்கிறே உங்க அப்பா நல்லவருன்னு. ஏழை எளியவங்க வாயிலேயும் வயத்துலேயும் அடிச்சு வட்டி வாங்கி அநியாயமா பணத்தைச் சேக்குறாரு உங்கப்பா..தெரியுமா உனக்கு?

குஞ்சு.—நிசமாவா சார்?

ஏகாம்.—பின்னே நான் பொய்யா சொல்றேன். நீ கழுத்திலே காதுலே போட்டிருக்கிறியே அத்தனை நகையும் உங்கப்பா அக்கிரமமாச் சம்பாதிச்சது. ஒண்ணு சொல்றேன் கேக்குறியா..

குஞ்சு.—சொல்லுங்க சார் அப்படியே செய்யுறேன்.

ஏகாம்.—நம்ப தெருக்கோடியிலே இருக்காரே தனகோடி செட்டியார் அவர் மகள் தனம் இருக்குல்லே..

குஞ்சு.—ஆமா

ஏகா.—ஆமா..அந்த பொண்ணுகிட்டே இப்படித்தான் அவங்க அப்பா செய்யுற அக்கிரமத்தைப்பத்தி அளந்து விட்டேன். அவள் என்ன செஞ்சாத் தெரியுமா?

குஞ்சு.—என்ன செஞ்சா சார்?

ஏகாம்.—விஷயம் தெரிஞ்சவுடனே சும்மா அப்படியே தலைகுனிஞ்சு பாவம் பண்ணி சம்பாதிச்ச நகை நமக்கு வேண்டாமுன்னு சொல்லி எல்லாத்தையும் நம்ம நாட்டுப் பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்துட்டா.

குஞ்சு.—அப்படியா சார்..!

ஏகாம்.—ஆமா. அதுமட்டுமில்லே அளவுக்குமீறி நகைகளை வச்சிருக்கிறவங்களை போலீஸ்காரங்க ஜெயிலுக்கு புடிச்சிட்டுப் போகப்போறுங்க..

குஞ்சு.—ஐயையோ..அப்படின்னு நானும் என் நகையைப் பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்துடுறேன் சார். எங்கப்பா ஜெயிலுக்குப் போகக்கூடாது, சார்! போகக்கூடாது சார்!..

செட்டி.—(உள்ளே நுழைந்துகொண்டு) என்னம்மா அது சத்தம் என்ன விஷயம்?

குஞ்சு.—(அழுது கொண்டே) அப்பா அப்பா.. நம்ப கிட்டே இருக்கிற நகையெல்லாம் தேசப் பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்துடுங்கப்பா! கொடுத்துடுங்கப்பா.

செட்டி.—(கோபத்தோடு ஏகாம்பரத்தைப் பார்த்து) அடப்பாவி! என் பொண்ணு மனசைக் கெடுத்திட்டியேடா. போடா வெளியே, இனிமேல் இந்தப் பக்கம் வந்தே காலை ஒடிச்சு கையிலே கொடுத்துடுவேன். போடா வெளியே! (ஏகாம்பரம் பயந்து ஓடுகிறுன்)

குஞ்சு.—அப்பா நீங்க பண்ணுன பாவம் தொலையுறதுக்கு பாதி நகையாவது பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்திடலாம்பா..அப்பா..அப்பா..

செட்டி.—(அதட்டலுடன்) குஞ்சு நீ உள்ளே போகமாட்டே.. அதிகப் பிரசங்கி.

குஞ்சு.—அப்பா நீங்க நகையைக் கொடுக்கல்லேன்னு, நான் கிணத்திலேயே விழுந்து செத்து போவேன்..

செட்டி.—அய்யய்யோ..அப்படி ஏதாவது செய்துகிடாதேம்மா. என் சொத்துக்கு வாரிசு இல்லாமே போயிடும்....

குஞ்சு.—அப்படின்னு நகையை நிதிக்குக் கொடுங்க.

செட்டி.—சரி குடுத்தாப் போச்சு நீ போ..

குஞ்சு.—அப்படின்னு..நல்ல அப்பா (குழைந்துவிட்டுப் போகிறுள்)

செட்டி.—(தனிமையில்) நம்ம குஞ்சு சொல்றதும் ஞாயம் தான். பணமோ பாவம் பண்ணிச் சேர்த்தது. நம்ம நாடோ இப்போ கலங்கிப்போய் நிக்குது..நாம் சும்மா இருக்கிறது நல்லா இல்லே. பாதி நகையைக் கொடுத்து பாவத்தைப் போக்கிக்கிருமே. பேரும் பேப்பர்லே வரும்..

—திரை—

காட்சி 16

ஊர்வலம். ராஜு "கோரிக்கை" அட்டையைத் தூக்கிக் கொண்டு முன்னே செல்ல, வேலாயுதம், வேதாசலம் ஜோடியாகப் பின்னே செல்லுகின்றனர். சோமு, மூக்கன் காளிமுத்து, கருப்பண்ணன், A.E O., B.D.O., லட்சுமி, சுசீலா ஜோடி ஜோடியாகச் செல்லுகின்றனர். கடைசியில் செட்டியாரும் குஞ்சிதமும் வருகின்றனர்.

ராஜூ.—உணவை (என்று கோஷமிட)

எல்லோரும்.—பெருக்குவோம்.

ராஜூ.—சீனரை....

எல்லோரும்.—விரட்டுவோம் (கோஷம்)

[மூன்று முறை கோஷமிடும் ஒலி விண்ணைப் பிளந்து கொண்டு செல்லுகிறது].

ஸ்ரீ முருகன்

தமிழ்நாடு குடிசைத் தொழில்கூடம்

44, வடக்கு ரத வீதி, சீர்காழி

(தஞ்சை மாவட்டம்)

(அரசினரால் பதிவு செய்யப்பட்டது).

கைதேர்ந்த அனுபவமிக்க தொழிலாளர்களால் நீண்டகால உழைப்புக்கு ஏற்ற உறுதியான நவீன விவசாய கருவிகளை நேர்த்தியாக தயாரித்து சகாய மான விலையில் அளிக்கின்றோம். குறைந்த உழைப்பில் நிறைந்த உழவு சிக்கனம், உழும் காளைகளும் எளிதில் சோர்வு அடையாது. விவசாய இலாகா, வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், கூட்டுறவு விவசாய சங்கங்கள், ஜப்பல்பூர் விவசாய ஆராய்ச்சியாளர்களால் எங்கள் கருவிகள் பாராட்டப் பட்டுள்ளதால் உங்களுக்கு இலாபமே.

எமது தயாரிப்புகள்:—(1) மேலூர் கலப்பைகள், (2) இரும்புக் கலப்பைகள், (3) தழை அமுக்கும் செட்டுகள், (4) களை எடுக்கும் கருவி, (5) வரப்புக் கட்டும் கருவி, (6) பரம்புப் பலகை, (7) மண் வெட்டி வகைகள், (8) கொழு வகைகள், (9) தேன் பிழியும் கருவி, (10) சேறு கலக்கும் பட்லர்கள், (11) முளை பரிசோதனைத் தட்டுகள் (12) விதைகளுக்கு மருந்து கலக்கும் ட்ரம்.

S. சாமிநாதன்,
உரிமையாளர்.

காட்சி 17

இடம்.—பொது மேடை.

பாத்திரங்கள்.—எல்லோரும்.

[வேதாசலம், வேலாயுதம், B.D.O. மூவரும் மேடையில் உட்கார்ந்திருக்கின்றனர். மற்றவர்கள் கீழே உட்கார்ந்திருக்கின்றனர்]

பி.டி.ஓ.—(எழுந்து வந்து) பொதுமக்களே! பெரியோர்களே தேசீயப் பாதுகாப்பு நிதி திரட்டுவதற்காக ஊர்வலம் வந்து இப்போது இங்கே கூடியிருக்கிறோம், இதுவரை நமது யூனியன் மக்கள் 10,001 ரூபாய் நிதி கொடுத்திருக்கின்றனர் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்தத் தொகையை விரைவில் ஒரு சிறப்பான கூட்டம் நடத்தி அரசாங்கத்திடம் நாம் கொடுக்க இருக்கிறோம். இப்போது நமது ஊரில் உழைப்பால் முன்னேறி இன்று உன்னதமான இடம் பிடித்துக்கொண்ட திரு. வேலாயுதம் பிள்ளையவர்களை இந்த நல்ல நேரத்தில் ஒரு சில வார்த்தைகள் பேசுமாறு உங்கள் சார்பாகவும் நமது சேர்மன் சார்பாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(எல்லோரும் கை தட்டுகின்றனர்)

வேலாயுதம்.—சேர்மன் ஐயா அவர்களே, ஆபீசர்களே, சகோதர சகோதரிகளே என்னை ஒரு பெரிய மனுஷனு நெனச்சு இங்கே பேசச் சொல்லிட்டாங்க. நான் என்ன பேசப்போறேன். ஒண்ணே ஒண்ணு சொல்றேன். நாடு இப்போ நெருக்கடியான நிலைமையிலே இருக்கிறதுனாலே, நாம் நாட்டுக்கு உதவி செய்யணும் எப்படி? எல்லோரும் போய் பட்டாளத்திலே சேந்திடறதா இல்லே. பட்டாளத்திலே இருக்கிற நம்ம சிப்பாய்ங்க வயிறு நிறைஞ்சாத்தான் பலமா சண்டை செய்யுவாங்க, அவங்க வயறு நிறையணுமுன்னு இங்கே நம்ம வயல் நிறையணும் நாமெல்லாம் நல்லாப் பாடுபட்டு உழைக்கணும். அதற்கு நம்ம அதிகாரிகள் B.D.O., A.E.O., எல்லாம் உதவி செய்யக் காத்துகிட்டிருக்கிறுங்க. அவங்க உதவியிலே முன்னுக்கு வந்து இன்னிக்கி உங்க முன்னுலே ஒரு பெரிய மனுஷனு நான் நிக்கிறேன். எனக்கு சேர்மன் ஐயா ஒரு பாதையைக் காட்டினுரு. அந்தப் பாதையிலே நம்ம டெமான்ஸ்மாஸ்டர் உதவியினுலே நடந்து போனேன். அந்தப் பாதை எனக்கு வெற்றிப் பாதையிலே போய் என்னைப்போல வெற்றியடையனும்னு டெமான்ஸ்மாஸ்டர் சொல்றமாதிரி திருந்திய விவசாயம் செய்யணும். அதிகாரிகளோடைய உதவியை நாடணும். அப்படி நடந்து நம்ம பாதையை வெற்றிப் பாதையாக்கிக் கிட்டோமுன்னு நாடு செழிக்கும். நம்ம தரித்திரம் ஓடிவிடும். நம்ம சிப்பாய்கள் பாதையும் வெற்றிப் பாதையா அமையும். இதோட என்னுடைய பேச்சை முடிச்சிக்கிறேன். (உட்காருகிறார்).

சேர்மன்.—கூட்டத்திற்கு வந்த எல்லோருக்கும் நன்றி. கூட்டம் தேசிய கீதம் பாடிவிட்டு நாம் எல்லோரும் கலைந்து செல்வோம்.

எல்லோரும்.—ஜன கன மன....

—திரை—

முற்றும்.

(24-ம் பக்கம் தொடர்ச்சி)

சேமித்து வைக்கும் சோளத்தைத் தாக்கும் மூக்குவண்டு.

இம்மூக்குவண்டு சேமித்து வைக்கப்பட்ட சோள தானியத்தைத் துளைத்து சேதப்படுத்துகிறது. இப்பூச்சியைக் கட்டுப்படுத்த விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த பூச்சிப் பிரிவில் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டன. இப்பரிசோதனைகளில் ஆல்டிரின் (2 சதவீதம்). டையல்டிரின் (1.5 சதவீதம்), டி.டி.டீ. (10 சதவீதம்), டாக்கா பீன் (10 சதவீதம்) ஆகிய தூள்கள் கோ. 18 சோள விதைகளுடன் 1:100 என்ற விகிதத்தில் கலக்கப்பட்டு சேமித்து வைக்கப்பட்டன. இப்பரிசோதனைகளிலிருந்து டி.டி.டீ. (கெய்கி–33) 10 சதவீதம் மருந்தை உபயோகிப்பதன் மூலம் சேமித்து வைக்கப்பட்ட சோள தானியங்களை ஒரு ஆண்டுவரை இப்பூச்சிகள் தாக்காமலிருக்கச் செய்யலாம் என்று தெரிகிறது. மேலும் இச்சோள தானியத்தின் முளைப்பும் 90–94 சதவீதம் வரை இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு மருந்து சேர்க்கப்பட்ட தானியத்தை விதைப்புக்குத்தான் உபயோகிக்கவேண்டும். உண்பதற்கு உபயோகிக்கக்கூடாது.

நெல் குலைநோய்க்கு போர்டோக் கலவை.

நெல் குலைநோயைக் கட்டுப்படுத்துவதற்கு உகந்த பூசண மருந்து போர்டோக் கலவை (1 சதவீதம்) என்று ஆடுதுறை பிராந்திய ஆராய்ச்சிப் பண்ணையில் நடந்த பரிசோதனைகளிலிருந்து மீண்டும் நிரூபிக்கப் பட்டிருக்கிறது. இப்பரிசோதனைகளில் காப்பொசான் 0·5 சதவீதம், பைடோலான் 0·25 சதவீதம் ஆகிய மருந்துகளும் குலைநோய் தாக்கிய செடிகளுக்குத் தெளிக்கப்பட்டன. போர்டோக் கலவை மற்ற இரு பூசண மருந்துகளைக் காட்டிலும் சிறந்த முறையில் குலைநோயைக் கட்டுப் படுத்தியதோடு நல்ல மகசூலையும் அளித்தன. இப். பரிசோதனைகளில் குலைநோயால் எளிதில் பீடிக்கப்படும் ஏ.எஸ்.டி. ரகம் உபயோகிக்கப்பட்டது.

ஆகாசவாணி, திருச்சிராப்பள்ளி

1964-ம் வருஷ டிசம்பர் மாதத்திய கிராம நிகழ்ச்சி நிரல் :

வியாழன் (17—12—64)

மெல்லிசை
ஊர்ச்சாவடி
அறிவிப்புகள்
பாரதி பாடல்
திருக்குறள் விள்க்கம்
திட்டப்பாடல்கள்
செய்தி விளக்கம்

வெள்ளி (18—12—64)

மெல்லிசை
ஊர்ச்சாவடி
அறிவிப்புகள்
படப்பாட்டு
கிராம ரேடியோ மன்றம்
1 கேள்வி – பதில்
2 "மா" வின் கொடிய விரோதியாகிய தத்துப் பூச்சியை ஒழித்துக் கட்டுங்கள்

சனி (19—12—64)

மெல்லிசை
ஊர்ச்சாவடி
அறிவிப்புகள்
படப் பாட்டுகள்
நம் மாதர் மன்றம்
1 ஆப்பக்கார அங்காயி
2 சத்திய நெறி
3 நாட்டுப் பாடல் பயிற்சி

ஞாயிறு (20—12—64)

" கண்டி ராஜா " — நாடகம்

திங்கள் (21—12—64)

மெல்லிசை
ஊர்ச்சாவடி
அறிவிப்புகள்
பாசுரம்
சரித்திரக் கதைகள்
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்
மார்கழித் திருநாள் – சித்திரம்

செவ்வாய் (22—12—64)

மெல்லிசை
ஊர்ச்சாவடி
அறிவிப்புகள்
படப்பாட்டு
கிராம ரேடியோ மன்றம்
1 கேள்வி – பதில்
2 கதர் உற்பத்தி

புதன் (23—12—64)

அருட்பா
ஊர்ச்சாவடி
அறிவிப்புகள்
ஜாதி வேற்றுமையை ஒழிப்பதில் பஞ்சாயத்துக்களின் பங்கு
செய்தித் தாள்
படப் பாட்டுகள்
கடனில் பங்கு : நாடகம்

வியாழன் (24—12—64)

மெல்லிசை
ஊர்ச்சாவடி
அறிவிப்புகள்
கிறிஸ்துமஸ்—கதாகாலக்ஷேபம்
செய்தி விளக்கம்

வெள்ளி (25—12—64)

மெல்லிசை
ஊர்ச்சாவடி
அறிவிப்புகள்
படப்பாட்டு
கிராம ரேடியோ மன்றம்
1 கேள்வி – பதில்
2 நமது ஜவான்களின் நலனுக்காக

சனி (26—12—64)

மெல்லிசை
ஊர்ச்சாவடி
அறிவிப்புகள்
படப் பாட்டுகள்
நம் மாதர் மன்றம்
1 சேமிப்பின் அவசியம்
2 சத்ய நெறி
3 நாட்டுப் பாடல் பயிற்சி

ஞாயிறு (27—12—64)

கிராமச் சிறுவர்கள்
அறிவிப்புகள்
மெல்லிசை
வயல்களில் எலித் தொல்லையை ஒழித்தல்
ஏகாதசி மகாத்மியம் : கதாகாலக்ஷேபம்

திங்கள் (28—12—64)

மெல்லிசை
ஊர்ச்சாவடி
அறிவிப்புகள்
தேவாரம்
முட்டைகள் கெடாமல் பாதுகாத்தல்
விலைவாசிகளின் வாராந்தர விமர்சனம்
வளரும் தமிழகம்

செவ்வாய் (29—12—64)

மெல்லிசை
ஊர்ச்சாவடி
அறிவிப்புகள்
படப்பாட்டு
கிராம ரேடியோ மன்றம்
1 கேள்வி-பதில்
2 "கம்போஸ்ட்" செய்ய உடனே தயாராகுங்கள்

புதன் (30—12—64)

திருவாசகம்
ஊர்ச்சாவடி
அறிவிப்புகள்
கெய்ரா ஜில்லா கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம்
செய்தித் தாள்
படப்பாட்டுகள்
பாவப் பணம் : நாடகம்

வியாழன் (31—12—64)

மெல்லிசை
ஊர்ச்சாவடி
அறிவிப்புகள்
திருக்குறள் விளக்கம்
பாரதிப் பாடல்
நமது சாதனை
செய்தி விளக்கம்

1964-ம் ஆண்டு ஜூன் மாதக் காலநிலை அறிக்கை

(சி. சுப்ரமணியன் & சி. ரங்கநாதன், விவசாயக் காலநிலை ஆய்வுப் பிரிவு, கோவை–3.)

இம்மாதம் முதல் ஐந்து தினங்களில் தமிழ்நாட்டில் சிற்சில இடங்களில் மழை பெய்தது. 1964-ம் ஆண்டு ஜுன் மாதம் 6-ம் தேதி தமிழ்நாட்டில் ஆங்காங்கு சற்று கனத்த மழையிருந்தது. ஆனால் 1964-ம் ஆண்டு ஜுன் மாதம் 7-ம் தேதி தமிழகமெங்கும் பொதுவாக வரட்சி நிலவியது. 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை பன்னிரண்டு நாட்களில் இம் மாநிலத்தில் சிற்சில இடங்களில் மழை பெய்தது. ஆனால் 19, 26 தேதிகளில் வரட்சி நிலவியது. இம் மாதத்தில் கடைசி இரு நாட்களிலும் வானிலை வரண்டிருந்தது. 1964-ம் ஆண்டு ஜுன் மாதம் 1, 2 தேதிகளில் பகல் வெப்ப நிலை சராசரிக்கு குறைந்திருந்தது. 1964-ம் ஆண்டு ஜுன் மாதம் 11-ம் தேதியில் சராசரிக்கு உயர்ந்திருந்தது. மற்ற நாட்களில் சராசரிக்கு சரியாகவே இருந்தது.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் சுமாரான மழையிருந்தது. இம்மழையால் சொர்ணவாரி நெல் பயிர் பயனுற்றது. நெற்பயிரில் சிறிதளவு இலைப்பேன் காணப்பட்டது. வட ஆற்காடு மாவட்டத்தில் சொற்ப மழையே பெய்தது. குடியாத்தம் பகுதிகளில் கரும்புப் பயிரை மாவுப் பூச்சிகள் மிதமாகத் தாக்கின. தென்னாற்காடு மாவட்டத்திலும் குறைவாகவே மழை பெய்தது. திண்டிவனம் பகுதியில் நிலக்கடலையில் இலைப்புள்ளி நோய் காணப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமாருக மழையிருந்தது. ஆடுதுறை, பட்டுக்கோட்டை, மன்னார்குடிப் பகுதிகளில் பசுந்தாளுரச் செடிகளும், பழ மரங்களும் இம் மழையால் பயனடைந்தன. இப் பகுதிகளில் குறுவை நாற்றங்கால்கள் கிணற்று பாசனத்தால் நீர்பாச்சப்பட்டு வருகின்றது. மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்து விடப்படாததால் குறுவை நெற்பயிர் பாதிக்கும் நிலையில் உள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சற்று கனத்த மழையிருந்தது. இம்மழை குறுவை மற்றும் சம்பா நெல் நாற்றங்கால்களுள் உதவியது. இராமநாத புரம் மாவட்டத்தில் மிக குறைவாக மழையிருந்தது. சாத்தூர் பகுதியில் நிலக்கடலை, சோளம் அறுவடைக்கு வந்தது. இம்மாதம் திருநெல்வேலி மாவட்டத்தில் சற்று அதிகமாக மழையிருந்தது. சங்கரன்கோயில் பகுதியில் நெல் நடவுக்கும் மிளகாய் பயிருக்கும் இம்மழை உதவியது. இங்கு சோளப் பயிரில் சிறிதளவு இலைப்பேன் காணப்பட்டது. கோவில்பட்டி பகுதியில் பருத்தியை காய்ப் புழுக்கள் மிதமாகவும் கருங்கிளை நோய் லேசாகவும் தாக்கின. சோளப் பயிரில் பெருமளவு வாடல் நோய் காணப்பட்டது. இப்பயிரில் சிறிதளவு தண்டு துளைப்பான் களும், கதிர் வண்டுகளும் இலைப்புள்ளி நோயும் காணப் பட்டன. மதுரை, கன்னியாகுமரி மாவட்டங்களில் சொற்ப மழையேயிருந்தது. உசிலம்பட்டி பகுதியில் மழை யின்மையால் பருத்திப் பயிர் பாதிக்கப்பட்டது. நாகர் கோவில் பகுதியில் நெற்பயிரை திரிப்ஸ் மிதமாக தாக்கின. சேலம் மாவட்டத்திலும் மழை குறைவு. மழையின்மை யால் நிலக்கடலை, நெல், காய்கறிப் பயிர்கள், மரவள்ளி முதலியன வாட்டமுற்றன. கிணறுகளில் தண்ணீர் வற்றியது. நிலங்களை உழுது பண்படுத்த முடியவில்லை. கோயமுத்தூர் மாவட்டத்திலும் மழை குறைவாகவே பெய்தது. போதிய மழையின்மையால் நெல் விதைப்பு தாமதமாயிற்று. இங்கு சோளம், ராகி, நிலக்கடலை, அறுவடைக்கு வந்தன. புடலை, வெண்டி, கத்திரி முதலியன விதைக்கப்பட்டன. கத்தரியில் சிறிதளவு புள்ளி வண்டும், வெண்டியில் இலைப்பேனும் காணப் பட்டன. ஈரோடுப் பகுதியில் மழையேயில்லை. இங்கு ராகி விதைப்புகள் வந்தது. மஞ்சள் பயிர் தோட்டத்தில் ராகியும், வெங்காயமும் ஊடு பயிராக நடப்பட்டன. பொள்ளாச்சிப் பகுதியில் மிதமான மழையிருந்தது. ஆன மலை, மடத்துக்குளம் பகுதிகளில் மிளகாய், நெல், ராகி நடவும் சோளம் அறுவடையும் இம்மாதம் நடைபெற்றது. இங்கு நிலக்கடலையில் சிறிதளவு அசுக்கள் காணப் பட்டன.

நீலகிரி மாவட்டத்தில் பெய்த குறைந்த மழையும் கோடைப் பயிர் உருளைக் கிழங்குக்கு உதவி புரிந்தது.

இம்மாதத்திய குறிப்பிடத்தக்க மழையளவுகளும். பிராந்திய மழையளவுகளும் பின்வருமாறு:—

I. குறிப்பிடத்தக்க மழையளவுகள் (அங்குலத்தில்)

வரிசை எண்	தேதி	இடத்தின் பெயர்	மழையளவு
1	1–6–64	கொடைக்கானல்	1·30
2	1–6–64	உதகமண்டலம்	1·29
3	6–6–64	திருச்சிராப்பள்ளி	3·03
4	23–6–64	பட்டுக்கோட்டை	1·12

II. பிராந்திய மழையளவுகள் (அங்குலத்தில்)

வரிசை எண்	பிராந்தியத்தின் பெயர்	இம் மாத மொத்த மழை யளவு	சராசரி யிலிருந்து மாறுபாடு	குறிப்பு
(1)	(2)	(3)	(4)	(5)
1	வட பிராந்தியம்	1·1	—2·0	மிகக் குறைவு
2	கீழ் கரைப் பிராந்தியம்	0·7	—1·0	குறைவு
3	மத்திய பிராந்தியம்	1·2	—1·4	குறைவு
4	தென் பிராந்தியம்	0.9	—1·0	குறைவு
5	மலைப் பிராந்தியம்	2·9	—2·4	குறைவு

1964-ம் ஆண்டு மார்ச் மாத கால நிலை அறிக்கை

மழையளவு (அங்குலத்தில்)

இடத்தின் பெயர்.	இம்மாத மொத்த மழை அளவு.	சராசரி யிலிருந்து மாறுபாடு.	ஜனவரி 1-ம்தேதி முதல் மொத்த மழை அளவு.
(1)	(2)	(3)	(4)
வடபிராந்தியம்			
சென்னை (மீனம்பாக்கம்)	0·8	—1·1	0·8
திரூர் குப்பம் *	1·9	—1·0	2·2
வேலூர்	1·2	—1·6	4·2
குடியாத்தம் *	0·5	—3·1	3·4
கீழ்கரைப் பிரதேசம்			
பாலூர் *	0·2	—1·9	0·9
திண்டிவனம் *	0·3	—1·8	1·0
கடலூர் *	0·4	—1·0	0·8
நாகப்பட்டணம்	0·8	—0·4	1·4
ஆடுதுரை *	0·5	—1·2	6·9
பட்டுக்கோட்டை *	2·2	+0·5	3·7
மத்திய பிராந்தியம்			
சேலம்	0·8	—2·3	10·[illegible]
சேலம் *	0·7	—2·1	8·1
கோயம்புத்தூர் *	0·3	—1·9	3·4
கோயம்புத்தூர்	0·3	—1·2	4·1
ஆளியார் நகர் *	0·7	—3·6	2·6
திருச்சிராப்பள்ளி	4·3	+2·5	7·6
தென் பிராந்தியம்			
மதுரை	1·2	—0·4	2·2
பாம்பன்	இல்லை	—0·2	3·5
கோவில்பட்டி *	1·7	+0·7	9·2
பாளையங்கோட்டை	0·8	+0·4	7·8
அம்பா சமுத்திரம் *	0·1	—1·0	9·1
நாகர்கோயில் *	1·4	—4·3	5 2
கன்னியாகுமரி *	1·1	—2·5	4·9
மலைப் பிராந்தியம்			
கொடைக்கானல்	2·3	—1·4	18·0
கூனூர்	2·8	—0·1	12·5
உதகமண்டலம்	3·0	—2·6	11·0
நஞ்சநாடு	3·0	—5·4	8·6



ஜல்லிப்பட்டியைச் சேர்ந்த (உடுமலைப்பேட்டை) திரு ஆர். இராஜகோபாலசுவாமி நாயுடு, எம்.எல்.ஏ. அவர்களின் கோ. 18 சோளப்பயிர். 1963–64-ம் ஆண்டு சோள விளைச்சல் போட்டிதாரர்களில் இவரும் ஒருவர்.

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1964

மழை காற்றில் அடிபட்டு கரும்பு சாய்ந்து முறிந்து விடாமல் தடுக்க அதன் சோலையை முறுக்கி விட்டம் கட்டுங்கள்

❖

இது உறுதியானதும் மலிவான முறையுமாகும்

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு விவசாயத் துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.